# கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப்
# நினைவுப் பகிர்வு

றமீஸ் அப்துல்லா
எம்.எம்.பாஸில்



# கலாநிதி எம்.எச்.எம்.அஷ்ர.ஃ.ப்
# நினைவுப் பகிர்வு

றமீஸ் அப்துல்லா
எம்.எம்.பாஸில்

விழுதுகள் பதிப்பகம்
ஒலுவில்.

**Dr M.H.M. Ashraff Ninaivup Pakirvu**

Editors

© Rameez Abdulla,

MM. Fazil

Second Edition

2016

Published by

Viluthukal Pathippakam, Oluvil

Type Setting

Jesmin Faizer

Layout & Cover Design

Nawas Sawfi

Printed

Design World Printers,

Sainthamaruthu 077 6401296

Pages

80

Price

Rs 500/=

ISBN: 978 – 955 – 42038 – 2 – 2

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தையே
தன் சுவாசமாகக் கொண்ட
எம்.எச்.எம். அஷ்ரஃபின் நினைவுகளுக்காக!

# முன்னுரை

1980களில் இலங்கை முஸ்லிம்களின் அரசியலில் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்திய எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் திடீர் மறைவு இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் நிரப்ப முடியாத இடைவெளியை ஏற்படுத்திற்று.

எம்.எச்.எம். அஷ்ரஃப் ஸ்தாபித்த முஸ்லிம் காங்கிரசும் அதன் குத்துநிலையான வளர்ச்சியும் அவரது ஆளுமையும் இலங்கையின் தேசிய அரசியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செலுத்தியுள்ளது. அஷ்ரஃபின் திடீர் மறைவு எதிர்பார்க்காதது. அந்நிகழ்விலிருந்து முஸ்லிம் சமூகம் தன்னை மீள ஒழுங்குபடுத்திக் கொள்வதற்குப் பகீரத முயற்சிகளில் ஈடுபடுகிறது. மெல்ல மெல்ல அஷ்ரஃபின் ஞாபகத் திலிருந்து அவரது அரசியல் வாரிசுகள் ஒதுங்கிக் கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டு இருக்கின்ற அதேவேளை, தேர்தல் காலத்தில் அவ் அரசியல் வாரிசுகளின் பிரதான பேசு பொருளாகவும் காட்சிப் பொருளாகவும் அஷ்ரஃபே அமைந்து விடுகிறார் என்ற பொதுவான கருத்தும் உண்டு. ஆனால், பொது அமைப்புக்களும் பொதுசனங்களும் எப்போதுமே அஷ்ரஃபை ஞாபகப்படுத்துவ திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவில்லை.

இவ்வகையில், அவ்வாறான பொது அமைப்புக்களிலும் வேறு விஷேட நிகழ்வுகளிலும் அஷ்ரஃப் தொடர்பாகத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நால்வர் ஆற்றிய உரைகள் இத்தொகுதியில் உள்ளன.

முதல் உரையாளர் எம்.ஏ.எம். பௌசர் அவர்களின் உரை கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியில் அஷ்ரஃபின் வருகையையும் பங்களிப்பையும் விரிவாகப் பேசுகிறது. கவிஞர் மன்சூர் ஏ. காதிரின், அஷ்ரஃபின் வரலாற்றையும் அரசியலையும் உள்ளடக்கிய 'விருட்சம், வேர்கள், விழுதுகள்' என்ற மிக நீண்ட உரையின் அஷ்ரஃபினது வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடும் பகுதி மாத்திரம் இத்தொகுதியில் 'தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப்: ஓர் அறிமுகம்' என்ற தலைப்பில் சேர்க்கப் பட்டுள்ளது.

மற்ற இரண்டு உரைகளும் றமீஸ் அப்துல்லா அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. அதில் முதல் உரை அஷ்ரஃபின் தனித்துவ அரசியல் சிந்தனையில் உண்டான மாற்றத்தைக் கோடிட்டுக் காட்டுகின்ற விமர்சன ரீதியாக அமைந்தது. மற்றப் பேச்சு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பாக அஷ்ரஃபின் அபிலாஷைகளைப் புலப்படுத்துகின்ற, அஷ்ரஃபின் பேச்சுக்களிலே இருந்து மேற்கோள் காட்டப்பட்ட உரையாக அமைந்தது.

ஐந்தாவது உரை இலங்கை முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சியில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்: கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப் குறித்த மறுவாசிப்பு என்ற தலைப்பிலானது. இதனை எம்.எம். பாஸில் அவர்கள் எழுதியுள்ளார். இலங்கை முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சியைக் கோடிட்டுக் காட்டுகின்ற இவ்வுரை அஷ்ரஃபின் வருகையினால் முஸ்லிம்களின் உயர்கல்வியின் வளர்ச்சியில் உருவான மாற்றத்தை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. மொத்தத்தில் எம்.எச்.எம். அஷ்ரஃப் பற்றிய நினைவுப் பகிர்வை இத்தொகுதி முன்வைக்கின்றது.

அஷ்ரஃபின் நினைவுகள் காற்றில் கலந்துவிட்டது போல அவரது சிந்தனைகளும் கலந்துவிடாது, அது பற்றிய வியாக்கியானங்களையும் விமர்சனங்களையும் பற்றிய உரைகள் நமக்குப் பயனளிக்கும் என்ற நம்பிக்கையில் நூலாக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இதில் சம்பந்தப் பட்ட அனைவருக்கும் மிக்க நன்றி.

பதிப்பாசிரியர்.

கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியும்
எம்.எச்.எம். அஷ்ரஃபின் வருகையும்

**எம்.ஏ.எம். பௌசர்** 09

தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் : ஓர் அறிமுகம்

**மன்சூர் ஏ. காதிர்** 24

இலங்கையின் பல்வகைமைப் பண்பும்
எம்.எச்.எம். அஷ்ரஃபின் அரசியலும்

**றமீஸ் அப்துல்லாஹ்** 46

தென்கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியும் அஷ்ரஃபின்
அபிலாஷைகளும்

**றமீஸ் அப்துல்லாஹ்** 53

இலங்கை முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சியில்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்:
கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப் குறித்த மறுவாசிப்பு 66

எம்.எம்.பாஸில்

# கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் அரசியல் எழுச்சியும் எம்.எச்.எம். அஷ்ரஃபின் வருகையும்

**எம்.ஏ.எம். பௌசர்**

கிழக்கிலங்கையின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எழுச்சியும் தனித்துவக் கட்சியான முஸ்லிம் காங்கிரசும் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களின் வருகை பற்றியும் உரையாற்றுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்டகாலமாக தமிழ் – முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் நல்லுறவுடன் வாழ்ந்து வந்திருக்கின்றனர். எனினும் 1980களில் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் அதிகரித்தனால் தமிழ் ஆயுத இயக்கங்களின் எதிரி மனோபாவம் முஸ்லிம்களுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டது. வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் நோக்கும் நிலை ஏற்பட்டது.

இந்தக் கட்டத்திலே முஸ்லிம் ஊர்காவற்படைவீரர்களும்,சிவில் சேவையாளர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்ப் போராளி களினால் கொல்லப்பட்டனர். முஸ்லிம் எல்லைப் புறக்கிராமங்கள் தமிழ்ப் புலிகளின் நெருக்குதல்களுக்கு உட்பட்டது. பலர் இடம்பெயர நிர்ப்பந்திக் கப்பட்டனர். சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக கிழக்கு முஸ்லிம்களைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் பல கோணங்களில் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

இத்தருணத்தில் கிழக்கு முஸ்லிம்களின் சமூக, அரசியல் பிரச்சினைகளை முன்கொண்டு செல்லத்தக்க உறுதியான முஸ்லிம் தலைமைக்கான வெற்றிடம் ஒன்று கிழக்கு முஸ்லிம்களால் உணரப்பட்டது. தெற்கின் முஸ்லிம் அரசியல் தலைமை ஆட்சியிலிருந்த அரசாங்கத்துடன் அல்லது பெரும்பான்மை கட்சிகளுடன் நெருக்கத்தினைப் பேணியதால் கிழக்கு மக்களின் பிரச்சினைகளில் கூடிய கரிசனை கொள்ள முடியாமற் போயிற்று.

இந்நிகழ்வுகளே கிழக்கின் அரசியல் புதிய வடிவம் பெறுவதற்கும், கிழக்கில் முஸ்லிம் தேசம் பற்றிய கருத்தாடல் கருக்கொள்வதற்கும் வழிவிட்டது. இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியற் தலைமையினை வழங்க கிழக்கு முஸ்லிம்கள் முனைந்தனர். மரபுசார்ந்த பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து சமூக அரசியல் செய்யும் பாரம்பரியம் மாற்றியமைக்கப்பட்டது. முஸ்லிம் தேச மக்களின் நலன்கள் குறித்து முஸ்லிம்கள் விழிப்படையலாயினர். புதிய அரசியல் மார்க்கத்திற்கான தேவையினை உணர்ந்தனர்.

## கிழக்கின் புதிய அரசியல் தலைமைத்துவம்:

எம்.எச்.எம். அஷ்ரஃப் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசினை ஒழுங்கமைத்த திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினைச் சார்ந்திருந்த முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் கிழக்கில் மீள் ஸ்தாபிக்கப் பட்டது. 1988 மாகாண சபைத் தேர்தலின் ஊடாக அஷ்ரஃப் ஆரம்பித்த அரசியல் பயணம் முஸ்லிம் தேசிய அரசியலில் புதிய அத்தியாயங் களுக்கான களத்தினை திறந்து விட்டது. இத் தேர்தலில் கணிசமான முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசுக்கு வாக்களித்தனர். இது அஷ்ரஃபின் கட்சிக்குக் கிடைத்த மிக முக்கிய அரசியல் அடைவாக விளங்கிற்று. அஷ்ரஃப் ஆளுமை நிறைந்த அரசியல் தலைமையாக உருப்பெற்றார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை, இந்திய அமைதிகாக்கும் படைகளின் வருகை கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை பெரிதும் பாதித்தது. தமிழ்ப் புலிகளின் வன்முறைத் தாக்குதல்களில் இருந்து கிழக்கு முஸ்லிம்கள் மீளமுடியாத நிலைக்குள்ளாகினர். முஸ்லிம்களைப் பாதுகாக்கும் செயற்திறனை இந்திய அமைதிகாக்கும் படைகளோ, இலங்கை இராணுவமோ கொண்டிருக்கவில்லை என்பது நிரூபண மானது. நாட்டின் பெரும்பான்மை அரசியல் கட்சிகளில் தங்கியிராது தமிழர்களைப் போன்று முஸ்லிம்களும் அவர்களுக்கான சொந்தக் கட்சிகளை கொண்டிருந்தால் அவர்களது விருப்பங்களும் குரல்களும் எளிதில் புறக்கணிக்கப்பட்டிருக்காது என அஷ்ரஃப் வாதிட்டார்.

1987இன் ஆரம்பப்பகுதியில் முஸ்லிம் காங்கிரசின் அழைப்புக்குப் பதிலளிக்கும் விதத்தில் கொழும்பில் முஸ்லிம் வர்த்தகர்கள் கிழக்கு மாகணத்தில் தமிழ்ப் புலிகள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட படுகொலை முயற்சிகளைக் கண்டித்தனர். ஒன்று திரட்டப்பட்ட பெருந்தொகை முஸ்லிம் இளம்பராயத்தினர் ஜனாதிபதி ஜயவர்தனாவின் இஸ்ரேல் நோக்கிய வெளியுறக் கொள்கையினைக் கண்டித்து கிளர்தெழுந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் அணுகுமுறையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் அதிருப்தியுற்று இருந்தது.

## தனித்துவ முஸ்லிம் கட்சியின் தோற்றம்:

இலங்கை முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகள் சார்பாகத் தேர்தல்களில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது புவியியல் இட அமைவினை கூடியளவு கருத்திற்கொள்ளாமல் செயற்பட்டிருந்தனர். இக்கட்சிகளுக்கு சவால் விடத்தக்க அழுத்தங்களையும் முஸ்லிம்களால் முன்வைக்க முடியவில்லை. இக்கட்சிகளும் சிங்கள பெரும்பான்மை சமூகத்தின் வாக்கினைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழர் எதிர் நிலைப்பாட்டினைக் கடைப்பிடித்ததோடு மட்டுமல்லாது, தங்களுக்கிடையே சித்தாந்த ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் முரண்பட்ட அரசியல் அணுகுமுறையினைக் கடைப்பிடித்தனர்.

எனினும் இன முரண்பாட்டின் தீவிரம், பாரம்பரிய முஸ்லிம் தலைவர்களில் முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்தமை என்பன வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் அவர்களது சொந்த அரசியல் அடையாளத்தின்படி அமைந்த தனித்துவக் கட்சி அமையப்பெற வழிவகுத்தது. அவ்விதமான முஸ்லிம் தனித்துவ அரசியல் கட்சியாகத் தோற்றம் பெற்றதே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகும். இக்கட்சி முஸ்லிம்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, தமக்கு நீதியினைப் பெற்றுத்தரும் என வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் கருதினர். அக்கட்சியின் தலைவர் அஷ்ரஃப் கோரிநின்ற மக்கள் ஆணையினை வடக்கு கிழக்கின் பெருமளவு முஸ்லிம் மக்கள் அங்கீகரித்தனர்.

## முஸ்லிம் காங்கிரசின் தந்திரோபாயம்:

1980இன் நடுப்பகுதியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றமையானது முஸ்லிம் அரசியலின் ஒரு புதிய தோற்றப்பாடாக இருந்தது. இக்கட்சி வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுக்காக உறுதிமொழி வழங்கியது. தமது கோரிக்கைக் கான பிரதான மார்க்கமாக தேர்தல் அரசியலினைத் தேர்ந்தெடுத்தது.

மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரஃப் மற்றும் அவரது கிழக்கு சகபாடிகள் கட்சியின் பிரதான இயந்திரவியலாளர்களாக மாறினர். எஸ்.ஜே.செல்வ நாயகம் ஆரம்பித்த சமஷ்டிக் கட்சியின் அங்கத்தவரான அஷ்ரஃப் பொருளாதார ரீதியாக பலவீனமான நிலையிலிருந்து வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தன்மையினை நன்கு புரிந்துகொண்டார். முஸ்லிம் வாக்குகள் தமிழ், சிங்கள வேட்பாளர்களுக்குச் செல்வதனைத் தடுப்பதற் கான இனத்துவ மதவாத சுலோகங்களைத் தன்வயப்படுத்திக் கொண்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் அல்-குர்ஆன், சுன்னா ஆகிய இரண்டினையும் பின்தொடர் வதென உறுதிமொழியெடுத்த கட்சி என பிரஷ்தாபிக்கப் பட்டது. அஷ்ரஃப் யதார்த்தங்களைப் புரிந்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த தனது எதிர்ப் பாளர்களை முறியடிப்பதற்கு தனது இன மைய மதவாத பிரச்சார சுலோகங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார். தமிழ் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டினைக் கடைப்பிடிப்பதிலும் அவரது இன மையவாத கொள்கை பெருமளவு தாக்கம் செலுத்தியது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பள்ளிவாசல்களை அதன் தளமாகப் பயன்படுத்தியது. அரசியல் ரீதியாக கிழக்கில் அது பெரும் சக்தியாக வெடித்தது. அதன் தலைவர் தனது உணர்பூர்வமான அரசியல் பேச்சுக் களிலும் தேர்தல் பிரச்சாரங்களிலும் இஸ்லாமிய அடிப்படைப் போதனை களை பிரஷ்தாபித்தார். அவரது பிரச்சாரங்களில் லாயிலாக இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (இறைவன் ஒருவன். முஹம்மது (ஸல்) அவனது தூதர் ஆவார்.) என்ற அல்-குர்ஆனிய வசனங்கள் தொனித்தன. இவ்வுணர்வுபூர்வமான அவரது வேண்டுதல்கள் பொருளாதார ரீதியாகப் பலவீனமான நிலையிலிருந்த, அரசியல் ரீதியாக ஓரங்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு முஸ்லிம்களை வெகுவாகக் கவர்ந்தது.

## தமிழ்த் தேசியத்துடன் முரண்பட்ட அஷ்ரஃப் :

தமிழர் அரசியல் முஸ்லிம்களின் பிரதான எதிரியாக அடையாளப் படுத்தப்பட்டது. சிங்கள அரசியல் பரப்புடன் இணைப்பினை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கப்பட்டது. இதற்கான வெற்றிகரமான தந்திரோபாயங்களும் முன்னெடுக்கப்பட்டன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சி மற்றும் அது கைக்கொண்ட தந்திரோபாயம் விடுதலைப் புலிகளுக்கு எரிச்சலையூட்டின. காங்கிரசின் தொடர்ச்சியான செயற்பாட்டுத் தந்திரோபாயங்கள் விடுதலைப் புலிகள் அதனை தடுப்பதற்கான முயற்சிகளை முடுக்கிவிடக் காரணமாக அமைந்தன. புலிகளின் பட்டியலில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இலக்கு வைக்கப் பட்டார். எம்.எச்.எம்.அஷ்ரஃப் பாராளுமன்றத்தில் பேசிய பின்வரும் கூற்று இதனை நிரூபிக்கின்றது!

"நாங்கள் முஸ்லிம்களாக இருப்பதற்காக, லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாவினை மொழிந்ததற்காக, நாங்கள் அல்லாஹ்விலும் நபி முஹம்மது (ஸல்) அவர்களிலும் நம்பிக்கை வைத்திருப்பதற்காக விடுதலைப் புலிகள் எங்களைக் கொல்கின்றனர். எங்கள் வீடுகளை விட்டும் விரட்டுகின்றார்கள் என்றிருந்தால் நாம் அவர்களுக்கு எதிராக ஜிஹாதினைப் பிரகடனம் செய்ய வேண்டும். பிரபாகரன் உள்ளடங்கலான ஒவ்வொரு விடுதலைப் புலி உறுப்பினரையும் கொல்ல வேண்டும். இதுவே குர்ஆனின் கட்டளை. இரத்தக் கறைபடிந்த பிரபாகரனின் கழுத்தினை நெரிக்கும் போராட்டத்தில் நான் மரணமடைய நேரிட்டால் சந்தோசமடைவேன்."

## அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ்:

1988இலிருந்து மத அடிப்படையிலான இன உந்துதல்களுடன் முஸ்லிம் காங்கிரஸ் பல தேர்தல்களைச் சந்தித்தது. படிப்படியாக முஸ்லிம் ஜனப்பிரிவினரிடமிருந்து மிகுந்த ஆதரவினை அது பெற்றுக் கொண்டது. சிங்கள அரசியல் வகுப்புக்களை வெற்றிகொள்வதற்காக கொழும்பினை மையப்படுத்திய முஸ்லிம் உயர் வகுப்பினர் பயன்படுத்திய அரசியல் இருப்பிடத்தினை உறுதிசெய்யும் ஒரு விதத்தந்திரோபாயத்தினை முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடித்தது.

அஷ்ரஃப் வெற்றிகரமான முறையில் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தார். சிங்கள அரசாங்கத்திடமிருந்து பிரதான அமைச்சுப் பதவிகளையும் முஸ்லிம்களுக்குப் பெற்றுக்கொடுத்தார். அவரும் அவரது கட்சி சகாக்களும் துறைமுகங்கள், கப்பல்துறை, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கலான பல அமைச்சுப் பொறுப்புக்களையும் பிரதி அமைச்சுப் பொறுப்புக்களையும் பெற்றுக் கொண்டனர். அவரது கட்சி ஆதரவு பெற்ற பலர் அரசாங்கத் திணைக்களங்களில் சேர்க்கப்பட்டனர். இராஜதந்திர நியமனங்கள் பல பெற்றனர். கட்சியின் ஆதரவாளர்களும் இளைஞர்களும் அரசாங்கப் பதவிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

## மாகாண சபைத் தேர்தல்:

முஸ்லிம் காங்கிரஸ் ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டதனை அடுத்து 1988இல் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டது. இத்தேர்தலில் காங்கிரஸ் 17 ஆசனங்களைக் கைப்பற்றியது. வடக்கு கிழக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சியானது. அம்பாரை மாவட்டத்தில் மட்டும் காங்கிரஸ் 09 ஆசனங்களைக் கைப்பற்றியது. திருகோணமலையில் 05 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 03 பேரும் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ் ஆயுததாரிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் இவ்வெற்றியினைப் பெற்றுக்கொண்டமை அதன் குறுகிய கால வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும். பின்நாட்களில் அக்கட்சி தேசிய அரசியலில் ஈடுபடுவதற்கு நல்ல சமிக்ஞையாகவும் இத்தேர்தல் அமைந்திருந்தது. உண்மையில் கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண நிலை, தமிழ் தேசியத்தில் வடக்கு கிழக்கு மக்கள் நம்பிக்கை இழந்திருந்தமை என்பன முஸ்லிம் காங்கிரசின் இவ்வெற்றிக்குக் காரணமாக அமைந்திருந்தன.

எனினும் முஸ்லிம் காங்கிரஸின் முதல் தேர்தல் அரசியல் பிரவேசம் 1987இல் இடம்பெற்றது. குறிப்பாக இவ்வாண்டில் நடாத்தத் திட்டமிடப் பட்டிருந்த கிழக்கின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சுயேட்சைக் குழுவாக தராசு சின்னத்தில் போட்டியிட்டது. முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியாக இல்லாமையினால் அத் தீர்மானம் அதன் தலைவர்களால் எடுக்கப்பட்டது. துரதிஷ்டவசமாக

இக்காலத்தில் இந்திய – இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமையினால் தேர்தல் இடம்பெறவில்லை.

## 1989 பொதுத்தேர்தல்:

1989 இல் இடம்பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல் கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதாகும். வழக்கமாக பெரும்பான்மைக் கட்சிகளிலும் சுயேட்சையாகவும் முஸ்லிம் வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கும் நிலையிருக்க, முஸ்லிம் காங்கிரசின் உதயம் சிறுபான்மை முஸ்லிம் பிராந்தியக் கட்சியொன்றின் கீழ் முஸ்லிம் வேட்பாளர்கள் படையெடுக்க வழிவிட்டது.

இத்தேர்தலின் முக்கிய அம்சங்களுள் ஒன்று. அது விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் இடம்பெற்றதாகும். அம்முறையின் கீழ் இலங்கையின் நிருவாக மாவட்டங்களை மையமாகக் கொண்டு தேர்தல் மாவட்டங்கள் வரையறுக்கப்பட்டன. சுயேட்சை வேட்பாளர் நியமனமுறை நிறுத்தப் பட்டு. கட்சி அல்லது குழு ரீதியாக போட்டியிடும் முறை அறிமுகமானது. கட்சி அல்லது குழுவுக்கு வாக்களிப்பது கட்டாயமாக் கப்பட்டது.

இத்தேர்தல் மூலம் உருவாக்கப்பட்ட பாராளுமன்றத்தில் கணிசமான தொகை முஸ்லிம் உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களது வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே பிரிந்தன. முஸ்லிம் வாக்குகளில் சுமார் 75 வீதமானவை முஸ்லிம் காங்கிரசுக்குக் கிடைத்தது. திகாமடுல்ல (அம்பாரை) தேர்தல் மாவட்டத்தில் அதிகபட்சமாக 61325 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தினை காங்கிரஸ் பெற்றுக் கொண்டது. அதன் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். எனினும் 1994 மே மாதம் அஷ்ரஃப் தனது பாராளுமன்ற உறுப்புரிமைப் பதவியினை இராஜினாமாச் செய்ததை அடுத்து, யூ.எல்.எம்.முஹைதீன் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

எனினும் இத்தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சுமார் 700 வாக்கு வித்தியாசத்தால்இரண்டு ஆசனங்களை இழந்தது.

இம்மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பல முஸ்லிம் அரசியல் வாதிகள் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு, அக்கட்சி சுமார் முப்பதாயிரம் முஸ்லிம் வாக்குகளைப் பெற்றிருந்தும் முஸ்லிம் வேட் பாளர்கள் எவரும் வெற்றி பெறமுடியவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் 36867 வாக்குகளைப் பெற்று, ஒரு ஆசனத்தினைப் பெற்றுக்கொண்டது. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக வெற்றி பெற்றார். திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் 17884 வாக்குகளைப் பெற்ற போதிலும் எந்தவொரு ஆசனத்தினையும் வெற்றிகொள்ள முடியவில்லை. அம்மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட எம்.ஈ.எச்.மஃறூப் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்விரு மாவட்டங்களுக்குப் புறம்பாக முஸ்லிம் காங்கிரஸ் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஒரு பிரதிநிதியினைப் பெற்றுக்கொண்டதுடன், தேசியப் பட்டியல் மூலமாக ஒரு பிரதிநிதியினை நியமிப்பதற்கான வாய்ப்பினையும் பெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சைக் குழு வேட்பாளராகப் போட்டியிட்ட பஷீர் சேகு தாவூத் வெற்றி பெற்றிருந் தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எனினும் அவர் கணிசமான தமிழ் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கால ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரவையில் ஏ.சி.எஸ்.ஹமீத், ஏ.ஆர்.மன்சூர் ஆகியோர் பொறுப்புள்ள அமைச்சுப் பதவிகளை ஏற்றிருந்தனர். ஜாபிர்.ஏ.காதர், ஏ.எச்.எம்.அஸ்வர், எம்.எல்.எம்.அபுசாலி, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மற்றும் எம்.ஈ.எச்.மஃறூப் ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களுள் ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியல் வேட்பாளராக நியமிக்கப்பட்ட ஏ.ஆர்.மன்சூர் மற்றும் மஃறூப் ஆகியோர் கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் அஷ்ரஃப்:

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் எழுச்சிக்குரிய காலகட்டம் 1994இல் ஆரம்பித்தது. 1994இல் உருவாகிய பொதுஜன ஐக்கிய முன்னணி

அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாறியதனை அடுத்து, அரசியல் ரீதியாக அது பல சலுகைகளைப் பெற்றுக் கொண்டது. அரசாங்கத்தில் காங்கிரஸ் பெற்றுக் கொண்ட இம்முக்கிய இடம், கிழக்கு அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் எழுச்சியுறவும், கிழக்கு மக்கள் அரசியல் ரீதியாக மேலும் சமுதாயப்படுத்தப்படவும் வழிவிட்டது.

1994 பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஏழு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இவர்களுள் நான்கு பேர் கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்தவர்கள் ஆவர். எம்.எச்.எம்.அஷ்ரஃப், யூ.எல்.எம்.முஹைடீன் ஆகியோர் திகாமடுல்ல மாவட்டத்தில் இருந்தும், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தும், எம்.என்.அப்துல் மஜீத் திருகோணமலை மாவட்டத்திலிருந்தும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக செய்யத் அலிசாஹிர் மௌலானா தெரிவு செய்யப்பட்டார். மௌலான தவிர்ந்த கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மற்றைய அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரசில் இருந்து தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். வழக்கமாக பெரும்பான்மைக் கட்சிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கிழக்கு முஸ்லிம் அரசியல் தலைமைகளின் செல்வாக்கு இத்தேர்தலுடன் முடிவுக்கு வரலாயிற்று.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைப்பதற்கு தேவைப்பட்ட எஞ்சிய ஆசனங்களை, காங்கிரஸ் பெற்றிருந்த ஏழு ஆசனங்களையும் கொண்டு நிரப்பமுடிந்தது. அஷ்ரஃப் ஆட்சியினைத் தீர்மானிக்கும் சக்தியானார். அவர் ஆட்சியின் பங்காளியானார். குறுகிய காலத்திற்குள் அவர் கிழக்கின் முஸ்லிம் தலைவராக தன்னை மாற்றிக் கொண்டார். நாட்டின் பல பாகங்களுக்கும் தனது அரசியலை விரிவுபடுத்தினார். அரசாங்கத்தின் மூலம் அதற்கு சாதகமான சூழ்நிலையினை அஷ்ரஃப் உருவாக்கிக் கொண்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அமைத்துக் கொண்ட அமைச்சரவையில் அஷ்ரஃப் கப்பல் துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றார். முஸ்லிம் காங்கிரசினைப் பிரதி நிதித்து வப்படுத்திய கிழக்கின் மற்றுமொரு இளம் அரசியல் வாதியான மட்டக்களப்பு

மாவட்டத்தின் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தபால், தொலைத் தொடர்பு பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டார். அஷ்ரஃப் தனது அமைச்சுப் பதவியினைப் பயன்படுத்தி கிழக்கு முஸ்லிம்களின் கல்வி, அபிவிருத்தி மற்றும் அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தார். அதில் குறிப்பிடத்தக்க வெற்றியினையும் அவரால் பெறமுடிந்தது.

## முஸ்லிம் காங்கிரசின் எழுச்சி :

2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பித்திருந்த காலத்தில் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அகால மரணமடைந்தார். எனினும் இத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கான நிலையினை அவர் உருவாக்கியிருந்தார். இதன்படி திகாமடுல்ல, திருகோணமலை மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. ஏனைய மாவட்டங்களில் தேசிய ஐக்கிய முன்னணியினூடாகவும் தேர்தலில் போட்டியிட்டது. "தேசிய ஐக்கிய முன்னணி" தலைவர் அஷ்ரஃபினால் 1999 இல் உருவாக்கப்பட்டதாகும்.

இக்கூட்டணிக் கட்சிகளினூடாக முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்டத்தில் நான்கு உறுப்பினர்களைப் பெற்றது. அவர்களுள் மூவர் முஸ்லிம்கள், ஏனைய ஒருவர் சிங்களவர். திகாமடுல்ல மாவட்டத்தில் அஷ்ரஃபின் பாரியர் பேரியல் அஷ்ரஃப், ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், யு.எல்.எம்.முஹைதீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பாக எம்.பி.எம்.அப்துல் காதரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அலிசாஹிர் மௌலானாவும் தெரிவு செய்யப்பட்டனர். திருகோணமலை மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து நஜீப் ஏ மஜீத், எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் தெரிவு செய்யப்பட, ஐக்கிய தேசியக் கட்சியின் ஏ.எம்.முஹம்மது மஃறூபும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தேர்தலில் கிழக்கினைப் பிரதிநிதித்துவம் செய்யத்தக்க எட்டுப்பேர் பாராளுமன்ற உறுப்பினராகக் கிழக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். கிழக்குத் தொடர்பினைக் கொண்ட ரிஸ்வி சின்னலெவ்வை, எம்.அப்துல் மஜீத், பஷீர் சேகு தாவூத், யூ.எல்.எம். ஹனீபா ஆகியோர் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இதன்படி மொத்தமாக 12 கிழக்கு முஸ்லிம்கள் இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர்.

தேர்தல் வெற்றியினை அடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணி அமைத்த அரசாங்கத்தில் முஸ்லிம்கள் சார்பாக ரவூப் ஹக்கீம், பேரியல் அஷ்ரஃப், ஏ.எச்.எம்.பௌஸி, செய்யத் அலவி மௌலானா ஆகியோர் அமைச்சர் களாக நியமிக்கப்பட்டனர். அப்துல் காதர், நஜீப் அப்துல் மஜீத், நூர்தீன் மசூர், அதாவுல்லாஹ் ஆகியோர் பிரதியமைச்சர்களாக்கப்பட்டனர். எனினும் 2000 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் மிகுந்த அரசியல் இழுபறி காரணமாக மிகக் குறுகிய காலத்திற்குள் கலைக்கப்பட்டு 2001இல் மீண்டும் தேர்தல் நடாத்தப்பட்டது.

## புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை :

2000ஆம் ஆண்டுஅஷ்ரஃப் அகால மரணமடைந்ததனை அடுத்து முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவம் ரவூப் ஹக்கீமினைக் கொண்டு நிரப்பப்பட்டது. ஹக்கீம் மத்திய மாகாணத்தினைச் சேர்ந்தவர். எனினும் சில தளர்வுகளுடன் அஷ்ரஃபின் அரசியல் பயணத்தினைத் தொடர்வ தற்கான பாதையினை ஹக்கீம் தெரிவு செய்து கொண்டார். 2002 ஏப்ரலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை பிரபாகரனுடன் ஹக்கீம் மேற்கொண்டார். இவ்வுடன்படிக்கை முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மீள் இணக்கத்திற்கான சில பரிந்துரைகளை உள்ளடக்கியிருந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கை விதிகளைப் புலிகள் செயலுள்ளதாக்க வில்லை என்பதால் முஸ்லிம்கள் அதில் நம்பிக்கை கொள்ளவில்லை. கிழக்கில் முஸ்லிம்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்களில் அவர்களை மீள்குடியேற்றம் செய்து வைப்பதற்கு புலிகள் எந்த முயற்சியினையும் மேற்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகளை நோக்கிய முஸ்லிம்களின் அச்சத்தினைப் போக்குவதற்கு அவர்களால் வெற்றிகரமான முன்னெடுப் புக்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

மறுபுறத்தில் முஸ்லிம் காங்கிரசும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் சிங்கள ஆதரவான கொள்கைகளைக் கைவிடுவதில் சிக்கல்களை எதிர்கொண் டனர். இதன் மூலம் முஸ்லிம்களை நோக்கிய தமிழர்களின் சந்தேகம் வளர்வதற்கு அவர்கள் காரணமாக இருந்தனர்.

## அஷ்ரஃபின் மறைவு:

அஷ்ரஃபின் மறைவு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஐக்கியத்தினை ஆழமாகப் பாதித்தது. கட்சிக்குள் பல பிளவுகள் ஏற்பட்டன. முஸ்லிம் களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கும் உரிமைகளை வெற்றி கொள்வதற்குமான பொது வேலைத்திட்டத்தினை மேற் கொள்வதில் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் தோல்விகண்டனர்.

2002 போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் 2005 சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு விடயத்தில் சட்டக் கடப் பாட்டு வகிபாகத்தினை முஸ்லிம்களுக்குப் பெற்றுக்கொடுக்க இத்தலை மைகளால் முடியாமற் போயிற்று.

முஸ்லிம்களின் நலன்களை வெற்றிகொள்வதற்கான சரியான தெரிவு களையும் கொள்கைகளையும் ஆக்குவதற்கு முஸ்லிம் அரசியல் உயர் குழாமினரின் இயலாமை கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் விரக்தியினை ஏற்படுத்திற்று. இது கிழக்கு முஸ்லிம்கள் சீர்திருத்தவாத முஸ்லிம் தலைமைகளை நாடிச்செல்வதற்கு வழிவிட்டது.

## முஸ்லிம் இளைஞர்களின் எதிர்பார்ப்பு:

முஸ்லிம் இளைஞர்களில் ஒரு பகுதியினர் முஸ்லிம் காங்கிரசின் பிரதான நோக்கம் தங்களுக்கு அரச தொழிற்துறைகளைப் பெற்றுத் தருவதற்கான கொள்கைகளை வடிவமைப்பதாகவே இருக்க வேண்டும் எனக்கருதினர். கிழக்கில் முஸ்லிம் இளைஞர்கள் ஜனநாயமல்லாத மாற்று வழிகளின் மூலம் தமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதனை இயலுமானதாக்கும் வாய்ப்புக்களை இப்போக்கு ஏற்படுத்திற்று.

இங்கு குறிப்பிட்டுகூறக்கூடிய முக்கிய விடயம், தமிழ் ஜனங்களின் மத்தியில் இருந்த தமிழ் சீர்திருத்தவாத சட்டமுறைத்தன்மை உடைந்தமை தமிழர்களுக்கு எதிரான சிங்கள ஆக்கிரமிப்பினை இரட்டிப்பாக்கியது.

அரசுக்கும் அரச நிறுவனங்களுக்கும் எதிரான வன்முறை, தமிழர் கடும்போக்குவாதம் எழுச்சியடைவதற்கான புதிய வழிகளைத் திறந்து விட்டது.

கிழக்கின் முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது குடும்பங்களுக்கும் தெற்கில் உள்ள தமது சகபாடிகளுக்கும் பதவிகளையும் சலுகைகளையும் பெற்றுத் தருவதற்கான முஸ்லிம் ஜனநாயகக் குரலை குவிமையம் கொள்ளச் செய்திருந்தால் தமிழர் அரசியலில் நிகழ்ந்ததை ஒத்த விடயம் முஸ்லிம் அரசியலில் ஏற்பட்டிருக்க முடியும்.

## தந்திரோபாயங்களின் பிரதிபலிப்புக்கள் :

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தந்திரோபாயமும் கிழக்கின் இதர முஸ்லிம்களை மையப்படுத்திய பிராந்தியக் கட்சிகளின் தந்திரோபாயமும் பாரிய மாற்றங்கள் எதனையும் பிரதிபலிக்கவில்லை. மரபுவழி வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம் சிங்கள அரசியல் வகுப்புடன் இணைந்ததான அரசியல் இருப்பிடத்தினை உருவாக்கிக் கொள்வது முஸ்லிம் சமூகத்திற்கு ஆரோக்கியமானதாக அமையும் என்று கருதவில்லை. சிங்கள அதிகார வகுப்புடன் இணைந்த அரசியல் தந்திரோபாயத்தினை முஸ்லிம் காங்கிரஸ் கடுமையாக விமர்சித்திருந்தது. முஸ்லிம் அரசியல்வாதிகள் ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் பொம்மைகளாக இருப்பதனை காங்கிரஸ் கண்டித்தது.

எனினும் நடைமுறையில் முஸ்லிம் காங்கிரஸ் அதே விதத்திலான ஏற்புடைமை தந்திரோபாயத்தினையே கைக்கொண்டது. 1987இலிருந்து இத்தந்திரோபாயத்தினைக் கடைப்பிடித்தே கபினட் பொறுப்புக்களையும் கட்சிஅங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்குமான சலுகைகளையும் பெற்றுக்கொண்டது. உண்மையில் காங்கிரஸ் எவ்வித புதிய தந்திரோ பாயங்களையும் கைக்கொள்ளவில்லை. மறுவார்த்தையில் கூறுவதனால் பழைய அரசியல் சூத்திரத்தினை இஸ்லாமிய மதப் பெறுமானங்கள் உடன் மீள்வடிவமைத்துக் கொண்டது எனலாம். இதன்படி தற்போதய முஸ்லிம் காங்கிரசின் தர்க்கம் எவ்வித புதிய மாற்றங்களையும் பிரதிபலிப்பதாக இல்லை. முஸ்லிம் வாக்குகளைப் பெறு வதற்கான பழைய அரசியல் கொள்கைகளே மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன.

எனினும் கிழக்கு முஸ்லிம்களின் அண்மைய அரசியல் வரலாற்றில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உதயம் குறிப்பிடத்தக்கதாகும். இனமையவாத அரசியல் இலங்கையில் உச்சத்தில் இருந்த ஒரு காலப்பகுதியிலேயே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. கிழக்கு முஸ்லிம்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்புப் பிரச்சினைகள் மிகவும் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டது. அதிகரித்த இராணுவமயமாக்கம், முரண்பாட்டின் துருவமயமாதல் தமிழ் – முஸ்லிம் உறவினை மிக மோசமாகப் பாதித்தது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் உதயத்துடன் மத ரீதியான அடையாளத்தினை அடி யொற்றியதாக கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் அரசியல் மீள்வரையறை செய்யப்பட்டது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று அல்-குர்ஆன் வலியுறுத்தும் அரசாட்சி நெறியின் அடிப்படையில் இஸ்லாமியப் பெறுமானங்களை முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் பிரச்சாரப்படுத்துவதாக இக்கட்சி வாதிட்டது. அதிகாரத்திற்கு வந்தால் இஸ்லாமிய ஆட்சி நிறுவப்படும் என்ற கருத்தும் இக்கட்சியின் பிரச்சாரங்களில் தொனித்தது. 1980களில் முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கம், அதன் எழுச்சி கிழக்கு முஸ்லிம் அரசியலில் பல அடிப்படையில் முக்கியத்துவப்படுத்தப்பட்டது.

இதன்படி முஸ்லிம்களின் அரசியல் மையம் அல்லது தலைமைத்துவம் கொழும்பு அல்லது தெற்கிலிருந்து கிழக்குக்கு மாற்றப்பட்டது. மறுபுறம் இலங்கையின் கட்சிகள் இனரீதியான தன்மையினை வெளிப்படுத்தியிருந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் உதயம் தனித்துவ முஸ்லிம் அரசியல் கட்சியின் வருகையினைப் பிரதிபலித்திருந்தது. கிழக்கு முஸ்லிம்களை அரசியல் ரீதியாக ஒருங்கிணைப்பதில் அது வெற்றி கண்டது.

## முடிவுரை:

கிழக்கு மாகாணத்தில் மிகத் தொன்மையான வரலாற்றினைக் கொண்டுள்ள முஸ்லிம்கள் தமக்கான தனித்துவமான மத, கலாசாரப் பெறுமானங்களுடன் வாழ்ந்து வந்துள்ளனர். ஏனைய தேசிய இனங்களினின்றும் வேறுபடுத்தத் தக்க அடையாள அம்சங்களை அவர்கள் கொண்டுள்ளனர். வரலாற்றின் அடியே ஏனைய தமிழ், சிங்கள மக்களுடன் நட்புறவினைப் பேணி யுள்ளனர். பொருளாதார, சமூக வாழ்வில் ஏனைய இனங்களுடன் தொடர்பினைப் பேணிய முஸ்லிம்கள் அரசியலிலும் ஒற்றுமையினை வெளிப்படுத்தி இருக்கின்றனர்.

எனினும் கிழக்கின் சமூக அமைப்பு, வடக்கு கிழக்கின் போர்ச் சூழல்களால் இன நல்லுறவு பாதிக்கப்பட்டமை, தமிழ் தேசியத்தினூடாக முஸ்லிம்களின் நலனை நிறைவேற்றிக் கொள்வதில் நம்பிக்கையீனம் ஏற்பட்டமை, தெற்கின் முஸ்லிம் அரசியல் தலைமை கிழக்கு முஸ்லிம களின் தனித்துவ அரசியல் அடையாளத்தினை பேணத் தவறியிருந்தமை முதலான காரணங்களினால் கிழக்கு முஸ்லிம் அரசியல் புத்தெழுச்சி பெற்றது.

இலங்கையின் இனத்துவ சமூகவயப்பட்ட சூழலில் முஸ்லிம் அரசிய லுக்கான புதிய அடையாளத்தையும் உத்வேகத்தையும் கிழக்கின் அரசியல் தலைமைகள் பெற்றுக்கொடுத்தன. சிங்கள, தமிழ் தேசியங்களுக்கு ஈடான முஸ்லிம் தேசம் பற்றிய பிரக்ஞையை கிழக்கு முஸ்லிம் அரசியலே தோற்று வித்தது. எனினும் உள்ளக முரண்பாடுகளுக்கு மத்தியில் கிழக்கு முஸ்லிம் களின் ஐக்கியம், வரலாற்றுப் பிறழ்வுகளாலும் காலமாறுதலாலும் சித றுண்டு போயுள்ளது. கிழக்கு முஸ்லிம்களின் நவீன அரசியல் வரலாற்றில் அது இன்னுமொரு புதிய பரிமாணத்தினை எதிர்பார்த்து நிற்கின்றது.

O_O

# தலைவர் எம்.எச்.எம். அஷ்ர∴ப் : ஓர் அறிமுகம்

மன்சூர் ஏ. காதிர்

## குடும்பமும் பின்னணியும்:

1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரத்தைக் கொண்டுவந்து சேர்த்த வரலாற்று முக்கியத்துவமான ஓர் ஆண்டு. இந்த ஆண்டின் ஒக்டோபர் 23 ஆம் திகதி இலங்கையின் ஓர் அதிசயக் குழந்தை சம்மாந்துறையில் ஜனித்தது. அக்குழந்தைக்கு அதன் பெற்றோர் முஹம்மது அஷ்ரஃப் என்று பெயரிட்டனர்.

அஷ்ரஃப் எனும் அந்தக் குழந்தையின் தந்தையார் பெயர் முஹம்மது ஹூசைன். இவர் கல்முனைக்குடியின் காரியப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர். முஹம்மது ஹூசைன் அவர்களின் மூதாதையர்கள் தம்பி நெய்ந்தை காரியப்பரின் வாரிசைச் சேர்ந்தவர்கள். அஷ்ரஃப் அவர்களின் தந்தை வழிப் பாரம்பரியம் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் நூலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தம்பி நெய்ந்தைக் காரியப்பரின் பாரம்பரியம் இலங்கை முஸ்லிம்களின் புராதன வதிவிடங்களில் ஒன்றானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான வெல்லஸ்ஸ பிராந்தியத்தைச் சேர்ந்ததாகும்.

அஷ்ரஃப் அவர்களின் தாயார் ஈழத்தின் நெற்களஞ்சியம் எனும் புகழ்பெற்ற சம்மாந்துறையைச் சேர்ந்தவர். சம்மாந்துறைப் பெண்களும் அவரின் தோழிகளும் அவரை 'மதீனாக் கிளி' என்று செல்லமாக அழைத்துள்ளனர். அவரின் இயற் பெயர் மதீனா உம்மா என்பதாகும். மதீனா உம்மா சுலைமாலெவ்வை ஆலிம் என்பவரின் வழித்தோன்றலில் உதித்தவராவார்.

சுலைமாலெவ்வை ஆலிம் சம்மாந்துறையில் ஆன்மீகத் தலைமைத்துவத்தைச் சிறப்பாக அலங்கரித்தவர். சம்மாந்துறையின் ஆன்மீகக் கட்டமைப்பு வரலாற்றில் வியத்தகு மாற்றங்களை உண்டாக்கியவர். இஸ்லாமிய சீர்திருத்தங்களை மட்டுமன்றி சம்மாந்துறை

மல்கம்பிட்டி கொண்டவட்டுவான் பள்ளிவாசல்களுக்கும் ஷேத்திரங்களுக்கும் சொந்தமான காணிகள் சில நிலச் சுவாந்தர்களின் சொந்த உடைமைகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருந்தபோது தன்னுடைய சொந்தக் காணியை விற்றுப் பெற்ற பணத்தைச் செலவிட்டு நீதிமன்றம் சென்று வழக்காடி நீதியை நிலைநாட்டி வக்பு - பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தவர்.

சம்மாந்துறை, மல்கம்பிட்டி, கொண்டவட்டுவான், பள்ளிவாசல்கள், ஸியாரங்கள், ஷேத்திரங்கள் முதலியவற்றை ஒருமுகப்படுத்தி ஒற்றைக்குடை பரிபாலன அமைப்பின் கீழ் இலங்கையிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்தவர். இந்த அமைப்பு இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இவரின் தந்தையின் பெயர் உமறு லெவ்வை மரைக்காயர். சம்மாந்துறைப் பள்ளிவாசல்களின் பிரதம நம்பிக்கையாளராக இருந்த உமறு லெவ்வை மரைக்காயர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குக்கிராமமான மல்கம்பிட்டியிலே தனது வாசஸ்தலத்தை அமைத்திருந்தார். மல்கம்பிட்டி என்பது ஈரான் தேசத்தின் குராஷான் பகுதியிலிருந்து இஸ்லாமியப் பிரச்சாரத்துக்காக வந்த கலந்தர் சிக்கந்தர் வொலியுள்ளாஹ் அவர்களின் அடக்கஸ்தலம் அமையப்பெற்ற சம்மாந்துறையின் புராதன கிராமமாகும்.

இது மட்டுமன்றி உமறு லெவ்வை மரைக்காயர் சம்மாந்துறையின் மிகப்பெரிய வரலாற்று முதுசமான ஆங்கிலேயரோடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு காலனித்துவ அரசின் தேசத்துரோகியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட முகாந்திரம் அபூபக்கர் ஈஸாவின் இரத்த உறவினர் ஆவார் என அறியக் கிடைக்கின்றது.

உமறு லெவ்வை மரைக்காயரின் வாசஸ்தலம் மல்கம்பிட்டியிலே அமையப் பெற்றிருந்தாலும் சம்மாந்துறை பட்டினத்திலேயே வெள்ளிக் கிழமைகளில் சுற்றியிருந்த எல்லா சிறு கிராமங்களுக்கும் பொதுவான ஜூம்ஆ நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது சம்மாந்துறையில் ஜூம்மா நடைபெற்றுக் கொண்டிருந்த பள்ளிவாசலின் கதீபாக மஹ்மூது லெவ்வை ஆலிம் என்பவர் கடமையாற்றிக் கொண்டிருந்தார். பிரதம நம்பிக்கையாளர் ஜூம்ஆ தொழுகைக்காக மல்கம்பிட்டியில் இருந்து

பிரசன்னம் தரும் வரை கதீப் மிம்பரில் ஏறி பிரசங்கத்தை ஆரம்பிக்க முடியாது என்பது அன்றைய எழுதப்படாத விதிமுறையாக இருந்தது.

அவரின் புதல்வரான சுலைமாலெவ்வை ஆலிம் இந்தியாவில் ஓதி முடித்து அல் ஆலீம் பட்டத்துடன் ஊருக்கு வந்த முதலாவது வாரத்தின் வெள்ளிக் கிழமையிலும் கூட இந்த விதிமுறையே கடைப்பிடிக்கப் பட்டது. ஜூம்ஆவுடைய நேரம் கடந்து கொண்டிருந்தபோதும் பிரசங்கம் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதனைப் பார்த்த இளைஞரான சுலைமா லெவ்வை ஆலீம் கதீப் அவர்களிடம் தாமதித்துக் கொண்டிருப்பதற்கான காரணத்தை வினவினார். அப்போது கதீப் பிரதம நம்பிக்கையாளர் வரும்வரையில் குத்பா ஆரம்பமாவதில்லை எனப் பதில் இறுத்தார்.

இதனால் கோபப்பட்ட சுலைமாலெவ்வை ஆலீம் உடனடியாகக் குத்பா பிரசங்கத்தை ஆரம்பிக்குமாறும், இவ்வாறு தாமதித்தல் பாவமான காரியம் எனவும் அபிப்பிராயம் கூறினார். பிரதம நம்பிக்கையாளரின் புதல்வரே இவ்வாறு சொல்வதால் அல்லது கட்டளை இடுவதால் கதீப் வேறு வழியின்றி மிம்பறில் ஏறி பிசங்கத்தைத் தொடங்கினார். பிரசங்கமும் தொழுகையும் முடிந்து ஜனங்கள் வீடு நோக்கிப் பாதையால் நடந்து கொண்டிருக்கும் போதுதான் உமறு லெவ்வை மரைக்கார் தனது வில்லுக் கரத்தையில் ஆரோகணித்து இருந்துகொண்டு பள்ளிவாசலை நோக்கி வந்து கொண்டிருந்தார். ஜனங்கள் வீடு நோக்கிச் செல்வதைப் பார்த்த அவர் கரத்தையை நிறுத்துமாறு உத்தரவிட்டு பாதையால் வந்த மக்களிடம் விடயத்தை வினவினார். அப்போது மக்கள் கூறியதைக் கேட்ட உமறு லெவ்வை மரைக்காயர் கரத்தையைத் திருப்பி மீண்டும் தனது வாசஸ்தலத்தை நோக்கிச் செலுத்துமாறு கட்டளையிட்டார். பின்னர் தனது மகனான சுலைமாலெவ்வை ஆலிமை அழைத்து பள்ளிவாசல் நிருவாகத்தை அவரிடம் ஒப்படைத்துவிட்டார்.

அஷ்ரஃப் அவர்கள் சம்மாந்துறையில் பிறந்தாலும் அவரின் தந்தையாரின் உத்தியோகம் கல்முனைக் குடியில் அமையப்பெற்றிருந்தது. விதானை உத்தியோகம் (கிராம சேவகர்) என்பது அக்காலத்தில் பொலீஸ் கொஸ்தாப்பருக்கான கடமைக் கூறுகளையும் கொண்டிருந்தது. இக்கடமைப் பொறுப்புக்களின் நிமித்தமாக அவர் சம்மாந்துறையில் தங்கியிருத்தல் என்பது அவருடைய கடமைகளுக்கு பெரிதும் தடையாக அமைந்திருந்தது.

இதனால் அவர் தன்னுடைய வாசஸ்தலத்தை தனது புதிய இல்லத்தின் நிர்மாண வேலைகள் முடியும் வரை கல்முனைக்குடி சாஹிப் வீதியில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வீடொன்றுக்குக் குடி பெயர்த்திருந்தார். இதனால் அஷ்ரஃப் தனது ஐந்தாவது வயதில் கல்முனைக்குடியில் வசிக்கத் தொடங்கினார். ஆகவே, அவரின் கற்றல் செயற்பாடுகள் அனைத்துமே கல்முனையிலேயே இடம்பெற்றுள்ளன. குர்ஆன் பாடசாலை கூட கல்முனையிலேயே அமையப்பெற்றிருந்தது.

## கல்விப் புலமை:

கல்முனைக்குடியில் வசிக்கத் தொடங்கியமையினால் அவரின் ஆரம்பக்கல்வி அங்கிருந்த அல் அஸ்ஹர் ஆண்கள் பாடசாலையில் அமையப் பெற்றிருந்தது. அப்போது அப்பாடசாலையின் அதிபராக இருந்தவர் மருதமுனையைச் சேர்ந்த புலவர்மணி ஷரிபுத்தீன் ஹாஜி அவர்களாவார். புலவர்மணியும் இப்பாடசாலையுமே அவரின் ஆளுமையில் ஆரம்ப காலத்தில் செல்வாக்குச் செலுத்திய அம்சங்களாகும். புலவர்மணி அவர்கள் பற்றி அஷ்ரஃப் ஒரு முறை குறிப்பிடும்போது 'இந்த அஷ்ரஃபைக் கண்டுபிடித்த கொலம்பஸ் புலவர் மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்கள்தான்' என்று நெஞ்சுருகக் கூறினார்.

இந்த அல் அஸ்ஹர் பாடசாலையில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சி ஆசிரியர்கள் பாடசாலைப் பயிற்சிக்காக ஓர் ஆண்டிற்கு இரண்டு தடைவை செல்வது வழக்கம். ஒரு முறை சம்மாந்துறையைச் சேர்ந்த மர்ஹூம் எம். இஸ்மாலெவ்வை என்ற பயிற்சி ஆசிரியர் அஷ்ரஃப் கல்வி கற்ற வகுப்புக்கு குறுங்கால ஆசிரியர் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த வகுப்பில் பிள்ளைகளுக் கிடையே ஒரு சுவாரஷ்யமான சம்பவம் இடம் பெற்றது. அப்போது பாடசாலை மைதானங்களில் நெருஞ்சி எனப்படும் ஒரு வகையான முள் தாவரம் பரவலாகக் காணப்படும். அதன் முள்ளை சிறுவர்கள் பாதணிகள் நிறைய அப்பிக்கொண்டு வருவதால் அவை நடை பாதைகளிலும் வகுப்பறைத் தரைகளிலும் வெறுமனே பாதணிகளில் இருந்து களன்று கிடக்கும். இதனை வைத்து மாணவர்கள் தங்களுக்கிடையே குறும்புகளில் ஈடுபடுவது வழக்கம்.

ஒருநாள் மாணவன் அஷ்ரஃபுக்கு நேராக முன்வரிசையில் இருந்த மாணவனை எழுப்பி ஆசிரியர் வினாத் தொடுத்த சந்தர்ப்பத்தில் விடை சொல்ல எழுந்து நின்ற மாணவனின் கதிரையில் நெருஞ்சி முள் ஒன்றை இன்னும் ஒரு மாணவன் வைத்து விட்டான். குறித்த மாணவன் இருக்கையில் அமர அந்த முள் அவனின் பின் பக்கத்தைப் பதம்பார்த்து விட்டது. அதன் வேதனையினால் அம்மாணவன் துடித்து தனக்கு நேரே பின் பக்கத்தில் இருந்த மாணவனாகிய அஷ்ரஃபை ஆசிரியரிடம் குற்றம் சாட்டினான்.

சந்தர்ப்ப சூழல் அஷ்ரஃபுக்கு எதிராகவே இருந்தது. குறித்த மாணவன் தன்னுடைய குற்றச் சாட்டை வலுப்படுத்த அஷ்ரஃப் முள்ளை வைத்த தனைத் தான் தன்னுடைய இரண்டு கண்களாலும் கண்டதாக கூறினான். இதனால் ஆசிரியருக்கு அஷ்ரஃபைத் தண்டித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்நிலைமையில் அஷ்ரஃபின் விவேகம் வேலை செய்யத் தொடங்கிற்று. அஷ்ரஃப் ஆசிரியரை நோக்கி பின்வருமாறு கூறினார்.

"ஸேர், நான் முள்ளை வைத்ததை இவரின் இரண்டு கண்களாலும் இவர் கண்டிருந்தால் அதில் உட்காருவதற்கு இவர் ஒரு முட்டாள் இல்லை. அதில் நிச்சயமாக அவர் உட்கார்ந்திருக்க மாட்டார். எனவே நான் முள்ளை வைத்தது என்பதும் இவர் அதனை இவரது இரண்டு கண்களாலும் கண்டது என்பதும் பொய்"

அஷ்ரஃபின் இந்த வாதத்தைக் கேட்ட ஆசிரியர் இவரின் வாதத் திறமையையும் புத்திக் கூர்மையையும் விவேகத்தையும் அதில் உள்ள உண்மைத் தன்மையையும் மெச்சி பொய் கூறிய மாணவனுக்கு அறிவுரை கூறினார். இது அஷ்ரஃபின் வாழ்வில் மட்டுமல்ல அந்த பயிற்சி ஆசிரியரின் வாழ்விலும் மறக்க முடியாத ஒரு சம்பவமாகப் போய்விட்டது.

ஆரம்பக் கல்வி நிறைவடைந்ததன் பின்னர் இடைநிலைக் கல்விக்காக அஷ்ரஃப் முதன்முதலாக கல்முனை பாத்திமாக் கல்லூரியிலேயே சேர்க்கப்பட்டார். இவர் சேர்க்கப்பட்ட காலத்திலே இடை நடுவில் பாத்திமாக் கல்லூரி மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. காரணம் பாத்திமாக் கல்லூரி அப்போது அரசினால் சுவீகரிக்கப்பட்டு

அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. இதனால் அதிருப்தியுற்ற பாத்திமாக் கல்லூரி சமூகம் நீதி மன்றத்தை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அதனால்தான் சில காலங்கள் பாத்திமாக் கல்லூரி இழுத்து மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அஷ்ரஃப் அவர்களின் தந்தையார் கல்முனை உவெஸ்லி உயர்தரக் கல்லூரியில் அவரைக் கொண்டு சேர்த்தார்.

அப்பாடசாலையும் அஷ்ரஃப் அவர்களின் ஆளுமை விருத்திக்குப் பெரிதும் உதவி செய்தது. அப்போது உவெஸ்லி கல்லூரிக்கு அதிபராக இருந்தவர் கல்விமான் எஸ்.ஜே.உவில்சன் என்பவர் ஆவார். இவர் மிகப் பிரபல்ய மான கல்விப் பாரம்பரியத்தைப் பின்னணியாகக் கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவர். மாணவர்களின் கல்வி மறுமலர்ச்சிக்காகத் தன்னைப் பெரிதும் அர்ப்பணித்த இந்தக் கல்விமானின் தலைமையானது அஷ்ரஃபின் பல்துறைப் பரிமாணங்களுக்கும் தீனிபோடும் அரிய சந்தர்ப்பத்தை அவருக்கு அளித்தது.

உவெஸ்லி கல்லூரிக் காலத்தில் அஷ்ரஃப் எல்லாத் துறைகளிலுமே முன்னணியான ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். விளையாட்டு, கலை, இலக்கியம், கையெழுத்துப் பத்திரிகை முதலிய எல்லாத் தடங்களிலும் அவர் தன் பாதங்களை ஆழமாக ஊன்றினார். அதனால் இவர் மாணவத் தலைவர் குழுவின் தலைவனாகவும் அவரின் இல்லத்தின் கெப்டனாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

அன்று உவெஸ்லி கல்லூரின் விளையாட்டுத் துறையிலும் கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டுத்துறையிலும் பிரகாசித்து பின்நாளில் கல்விக் கல்லூரியின் விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்ற - ஸ்கௌட் முஸ்தபா என்று எல்லோராலும் அழைக்கப்படுபவரான எம்.ஐ.எம். முஸ்தபா அவர்களுடன் சேர்ந்து கடுமையாக உழைத்தார். இதனால் கல்வித் துறையில் மட்டுமல்லாது இணைப்பாடவிதானத் துறையிலும் இவருடன் சேர்ந்து இவரது கல்லூரிக்கும் புகழ் உண்டாயிற்று.

அத்துடன் மிகுந்த நல்லொழுக்கம் உடையவராகவும் அஷ்ரஃப் மதிக்கப்பட்டார். அவரின் வாழ்வில் நடந்த இன்னொரு சம்பவம் அவரின் நற்குணத்துக்கும் நன்னடத்தைக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. அஷ்ரஃபும் முஸ்தபாவும் பாடசாலையில் இருந்து நடைபாதையால் நடந்து வீடு

திரும்பிக் கொண்டிருந்தபோது விலை உயர்ந்த கைக்கடிகாரம் ஒன்று பாதையில் கிடந்தது. அதனைக் கண்ட அஷ்ரஃப் அதனை எடுத்துப் பார்த்தபோது அது அப்போது மிகவும் பெறுமதி வாய்ந்த 'டமாஸ்' இன கைக்கடிகாரம் ஆகும். தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த பலர் இவ்வகைக் கடிகாரத்தைப் பாவிப்பதினால் அதன் பெறுமதி அஷ்ரஃ புக்கு நன்கு தெரியும்.

இதனைப் பார்த்த அவரின் நண்பர் முஸ்தபா மிகுந்த அச்சத்துடன் 'இதனை நாம் என்ன செய்வது' என்று வினவியுள்ளார். அப்போது அஷ்ரஃ ப் தைரியமாகச் சொன்ன பதில் முஸ்தபாவை அதிர்ச்சிக்கு ள்ளாக்கிற்று. 'நாம் இதை உடனடியாக பொலீசிடம் கொண்டு ஒப்படைப்போம்' என்று கூறிக் கொண்டே அஷ்ரஃப் விறு விறு என்று நடையைக் கட்டினார்.

இருவரும் அண்டையில் இருந்த பொலீஸ் ஹெட் குவாட்ர்ஸுக்குப் போய் நிலையப் பொறுப்பதிகாரியின் அறைக்குச் சென்றனர். அப்போது நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தவர் திரு. பொன்னுத்துரை என்பவராவார். நேரடியாக அவரிடம் சென்று நடந்ததைக் கூறி அந்த டமாஸ் ரக கைக்கடிகாரத்தையும் அஷ்ரஃப் ஒப்படைத்தார். அப்போதெல்லாம் பொலீஸ்காரர்களைப் பாடசாலை மாணவர்கள் கண்டால் தொடை நடுங்கும் காலம். மாறாக அஷ்ரஃப் அவர்கள் மிகத் தைரியமாக பொலீஸ் தலைமையகம் சென்று சாதாரண பொலீஸ் கொஸ்தாப்பர்களிடம் ஒப்படைக்காமல் நேரடியாக தலைமைப் பொறுப்பதிகாரியிடம் அச்சமின்றியும் புத்திசாதுரியமாகவும் நடந்துகொண்டமையை எச். கியூ. ஐ. பொன்னம்பலம் பாராட்டி அவர்களின் பெயர் விபரங்கள் மற்றும் பாடசாலை என்பனவற்றைக் குறித்துக் கொண்டார்.

அடுத்தநாள் வழமைபோல இவர்கள் பாடசாலையின் காலைக் கூட்டத்தில் நின்று கொண்டிருக்கும்போது குறித்த அஷ்ரஃபையும் முஸ்தபாவையும் மேடைக்கு வருமாறு அதிபர் உவில்சன் கட்டளையிட்டுள்ளார். இவர் களும் பேந்தப் பேந்த விழித்தவர்களாக பகிரங்கப் பிரம்படிக்கு நாம் எந்தத் தவறும் செய்யவில்லையே என்று கைசேதப்பட்டு மேடைக்கு வந்தனர். அப்போதுதான் அதிபர் அவர்கள் பொலீஸ் தலைமையகப் பொறுப் பதிகாரியின் பாராட்டுக்களையும் இவர்களின் நற்குணம், புத்திசாலித்தனம்

தைரியம் ஆகியவற்றை மெச்சி ஏனைய மாணவர்களும் இவ்வாறு பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுத்தர வேண்டும் என்று கூறினார். அதனால் அஷ்ரபின் மீது மட்டுமன்றி ஏனைய முஸ்லிம் மாணவர்கள் மீதும் ஒரு நற்பெயர் உவெஸ்லி பாடசாலை சமுகத்தில் ஏற்பட்டது. இது ஹுசைன் விதானையார் எத்தனை பக்குவமாகத் தனது புத்திரனை வளர்த்துள்ளார் என்பது மட்டுமன்றி அவர்களின் குடும்பத்தின் கௌரவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

விளையாட்டுத்துறையில் அவர் பிரகாசமான சாதனைகளை நிகழ்த்தாது போனாலும் விளையாட்டுத்துறையில் கலை இலக்கியத் துறையைப் போலவே மிகுந்த ஆர்வத்துடன் உழைத்துள்ளார். அதிகாலையில் கல்முனை நகர சந்தியில் இருந்து கல்லாற்றுப் பாலம் வரை தனது நண்பர் முஸ்தபாவுடன் ஓடிச்சென்று அதேவேகத்தில் திரும்பி வருவது இவரின் அன்றாட உடற் பயிற்சியாகும். உயர் கல்வியின் பொருட்டு கொழும்பு நகர் செல்லும் வரை தினசரி அதிகாலையில் நாய்கள் விரட்டுவதனையும் பொருட்படுத்தாது கல்லாறு கோஸ்வே வரை ஓடித் திரும்புதலை இவர் கைவிடவேயில்லை.

அப்போது எம்.ஐ.எம் முஸ்தபாவை ஆசிரியராகக்கொண்டு 'முளரி' என்ற ஒரு சஞ்சிகையை அஷ்ரஃபும் அவரும் வெளியிட்டனர். அந்தச் சஞ்சிகைக்கான கையெழுத்துப் பிரதியைத் தயாரிக்கின்ற பொறுப்பு அஷ்ரஃப் அவர்களிடமே விடப்பட்டது. அது மட்டுமன்றி அப்பாடசாலையின் தலைமை மாணவத் தலைவராகவும் அஷ்ரஃப் தொழிற் பட்டுள்ளார்.

இதில் விசேஷம் என்னவெனில் கல்முனையில் பிரசித்தி பெற்ற அனைத்து எழுத்தாளர்களுமே இதில் எழுதினர். நீலாவணன், ஜீவா ஜீவரெத்தினம், பாண்டியூரன், நுஃமான், அன்பு முகைதீன், யுவன், பஸீல் காரியப்பர் உட்பட தலைசிறந்த படைப்பாளிகள் இந்த கையெழுத்துப் பத்திரிகைக்கு ஆக்கங்கள் கொடுத்தனர்.

அது மட்டுமன்றி இந்தியாவின் பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் காலமான செய்தி வெளியாகிய அன்று இரவோடிரவாக அவர் தொடர்பான சிறப்பிதழ் தயாரிக்கப்பட்டு மறுநாள் அது சஞ்சிகையாக

வலம் வந்தது எனில் மாணவப்பருவத்திலேயே எத்தனை கடின உழைப்பும் அத்துடன் தகவல்களை திரட்டி அவற்றை வாசகர்களிடம் கையளிக் கின்ற திறனும் அவரிடம் காணப்பட்டிருக்கும் என்பது நமது புலன் களுக்கு புரியத்தக்கதாகும்.

உவெஸ்லி கல்லூரியில் படிக்கின்றபோது அங்கு மாணவர்களின் தலை மைத்துவப் பயிற்சிக்காக இயங்கிய மாணவர் பாராளுமன்றத்தில் இவர் 1966-68 களில் அப்போது அங்கு பிரபல்யம் பெற்றிருந்த 'மாணவர் சுதந்திரக் கட்சி' என்றதற்குப் பகரமாக 'கலை எழுச்சிக் கட்சி' என்ற ஒரு கட்சியை ஸ்தாபித்து அங்கிருந்த பாராளுமன்றத் தேர்தலில் குதித்துள்ளார். அவரின் கட்சியின் சின்னம் புத்தகம் ஆகும். எனினும் தேர்தல் முடிவுகளில் மாணவர் சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றதாகவே அறிவித்தல் வெளி யாயிற்று.

இதில் ஏதோ தவறு நடைபெற்றுள்ளதையும் தனது கட்சியாகிய கலை எழுச்சிக் கட்சியே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதையும் அத்தவறு இடம் பெற்றிருக்கக் கூடிய இடத்தையும் அஷ்ரஃப் கணித்துக்கொண்டார்.

உடனே தன்னுடைய வாதங்களை முறையீடாக எழுதி பாடசாலையின் பாராளுமன்ற முறைக்கு மஹா தேசாதிபதியாகக் கடமையாற்றிய ஜெபரெட்ணம் சேர் அவர்களிடம் முறையிட்டார். இவரின் முறையீடு உவெஸ்லி பாடசாலையின் மேன்முறையீட்டு மன்றத்தில் விசாரணைக்காக அனுமதிக்கப்பட்டுவிட்டது.

பின்னர் அங்கு முறையீட்டைச் செய்த கலை எழுச்சிக் கட்சியின் தலைவரும் செயலாளரும் அழைக்கப்பட்டிருந்தனர். அதுபோலவே தேர்தல் நடாத்திய குழுவினரும் அனுமதிக்கப்பட்டனர். விசாரணையில் தனது பக்க ஆதாரங்களை அஷ்ரஃப் தைரியமாக முன்வைத்தார். அது மட்டுமன்றி குறித்த தேர்தலில் தவறு நடைபெற்றிருந்த சூழ்நிலை களையும் அஷ்ரஃபால் நிரூபிக்கப்பட்டதை நிருவாகம் தட்டிக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் பாடசாலை நிருவாகம் இடைத் தேர்தலை பிரகடனம் செய்தது. இவ் இடைத் தேர்தலில் அஷ்ரஃபின் கலை எழுச்சிக் கட்சி பிரமாண்டமான

வெற்றியைப் பெற்றது. அதனால் அந்தப் பாராளு மன்றத்தில் அஷ்ரஃப் பிரதமரானார். அந்தக் கட்சியில் இப்போது பாராளுமன்ற உறுப்பினராகத் தொழிற்படும் பொன் செல்வராஜா மற்றும் ஸறூக் காரியப்பர் முதலியோரும் இடம்பெற்றிருந்தனர்.

அவரின் உவெஸ்லி கல்லூரியின் வாழ்க்கை அவருக்கு மிகுந்த பிரபலங்களையும் ஆளுமை விருத்தியையும் அவருள் உருவாக்கிற்று. இப்போது தமிழ் மீடியத்தில் கல்வி கற்கும் மாணவனாக இருந்தபோதும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிப் பேச்சு மற்றும் விவாதப் போட்டிகளிலும் அஷ்ரஃபே பெரும்பாலும் முன்னணியில் திகழ்ந்தார்.

சாரணர் இயக்கம், முதலுதவி இயக்கம், கெடெற் முதலிய எல்லா இயக்கங்களிலும் அதிக ஈடுபாடு காட்டினார். பாசாலையின் மேற்படி இயக்கங்களுக்கு இவர் கெப்டனாகவும் இருந்து நிறையப் பணியாற்றினார். காடுகள் வயல் வெளிகள் என்று எல்லா இடங்களிலும் சாரணர்களுடனும் கெடெற் படையினருடனும் சேர்ந்து அலைந்து திரிவார். தன்னை ஒரு இராணுவ வீரனாகக் கற்பனை செய்து கொண்டு அதற்கான எல்லாப் பணிகளிலும் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுவார். அப்போது சாரணர் இயக்கத்தில் ஜொப் கார்ட் - வேலைவார அட்டை நடைமுறையில் இருந்தது. அப்போது அஷ்ரஃப் அவர்கள் இந்த அட்டையில் ரூபா 148.00ஐ உழைத்து அம்பாறை மாவட்டத்திலேயே சாதனை ஒன்றை நிகழ்த்தினார். இந்தச் சாதனை 'இலங்கைச் சாரணர்' என்ற பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டதாக அன்றுவரை சாரணர் இயக்கத்தில் ஈடுபாடு காட்டி வரும் முஸ்தபா குறிப்பிட்டார்.

க.பொ.த (சா/த) பரீட்சையில் பெரும்பாலான பாடங்களில் அதிதிறமைச் சித்தியையும் சிலபாடங்களில் திறமைச் சித்தியையும் இவர் பெற்றிருந்தாலும் கணித பாடத்தில் அந்த முறை இவர் சித்தி எய்தி இருக்கவில்லை. இதனால் இவர் சற்று மன வருத்தப்பட்டார். ஆனால் மனம் உடைந்து போகவில்லை. கணித பாடம் தொடர்பாக இவர் பற்றிய அவரின் சுய மதிப்பீடும் கணித ஆசிரியர்களின் மதிப்பீடும் கிட்டத்தட்ட ஒரே தன்மையைக் கொண்டிருந்தன. அஷ்ரஃப் கணித பாடத்தில் புலியாக இல்லாது போனாலும் அடுத்த வருடத்துக்கான கணித பாடப் பரீட்சைக்குத் தீவிரமாக தன்னைத் தயார்படுத்தத் தொடங்கி அதில்

முழுமூச்சாக இராப்பகலாக இயங்கினார். இதன் பயனாக அடுத்த வருட சாதாரணதரக் கணித பாடப் பரீட்சையில் அதி திறமைச் சித்தியைப் பெற்று அவர் வெற்றிவாகை சூடி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த் தினார். தன்னுடைய சிந்தனைப் பலம் சில விடயங்களைப் பொறுத்த வரையில் குறைபாடுள்ளதாகக் காணப்பட்டாலும் நீண்ட தீவிர உழைப் பில் அதனை சாத்தியப்படுத்துவதில் அஷ்ரஃபுக்கு நிகர் அஷ்ரபே யாவார்.

இடைநிலைக் கல்வியின் பின்னர் தன்னுடைய ஆங்கில அறிவைப் பட்டை தீட்டிக்கொள்வதற்காக சட்டக் கல்லூரியில் நுழைவதற்கு முன்னர் கொழும்பு அக்குவினாஸ் கல்லூரியில் ஆங்கிலம் பயின்றார். இக்காலகட்டத்தில் அப்போது நீதிமானாக கடமையாற்றிய இவரின் அத்தான் ஹூசைன் நீதவான் அவர்களின் அரவணைப்பு அஷ்ரஃப் அவர்களுக்கு பூரணமாகக் கிடைக்கப்பெற்றது.

1968ஆம் ஆண்டு அஷ்ரஃப் அவர்களின் ஆளுமை பிரபல்யம் அடைவதற்கு மற்றொரு அம்சம் காரணமாக இருந்தது. இது 1968 இல் கல்முனையில் நடைபெற்ற இஸ்லாமிய சோஸலிச முன்னணியின் மாநாடு ஆகும். கல்முனை எம்.பியாக இருந்த எம்.சி. அஹமட் மற்றும் அட்வ கேட் ஷம்சுதீன் முதலிய ஆளுமைகளை அச்சாணியாகக் கொண்டு இவ் விழா மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான பேச்சுப் போட்டியும் இடம்பெற்றது. சோஸலிஸம் எனும் எண்ணக்கருவை அரசியல் அடிப்படையில் முஸ்லிம் இளைய தலைமுறையினரிடம் உருவாக்குவது இதன் பிரமாண்டமான இலக்காக இருந்தது.

அதன் போட்டிகளுக்கான தலைப்புக்களின் மையப் பொருள் 'இஸ்லாமும் சோஸலிஸமும்' என்பதாகக் காணப்பட்டது. அதன் எதிர்பார்ப்பானது அப்போதைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மையக் கோட்பாடாக இருந்த சோஸலிஸம் என்ற எண்ணக்கருவை இந்த மண்ணில் வாழும் முஸ்லிம்களின் இதயங்களில் விதைப்பதன் மூலம் முஸ்லிம்களிடத்தே மாற்று அரசியலுக்கான அடித்தளத்தை உறுதியாக இட்டுக்கொள்வது என்பதாகும்.

அடிப்படையில் இஸ்லாம் மாக்ஸிய மற்றும் சோஸலிச வாதங்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாக அஷ்ரஃப் தீவிரமாக நம்பிக்கை கொண்டிருந்த காலம் அது. இந்தப் பின்னணியைக் கொண்டிருந்த அஷ்ரஃப் இத்தகைய அரசியல் பின்னணியைக் கொண்ட ஒரு பேச்சுப்போட்டியில் கலந்து கொள்வது பலருக்கு ஆச்சரியத்தையும் சிலருக்கு ஏமாற்றத்தையும் உண்டாக்கிற்று.

போட்டி நடைபெறும் தினத்தில் அஷ்ரஃபும் ஒரு போட்டியாளராக சபையில் பிரசன்னமாகி இருந்தார். அஷ்ரஃபின் பெயர் அழைக்கப் பட்டதும் மேடைக்கு வந்து மிக அமைதியாகவும் நிதானமாகவும் உரையாற்றத் தொடங்கினார். தான் உரையாற்றும்போது தனது கருத்துடன் உடன்பட முடியாத சூழலினால் நடுவர்களுக்கு நீதியாகப் புள்ளியிட முடியாத சூழல் ஏற்பட்டால் அவர்களுக்கு தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதான பீடிகையுடன் தனது உரையை ஆரம்பித்து சரியாக பதினைந்தாவது நிமிடத்துடன் ஊசி விழுந்தாலும் அதன் ஒலி எல்லோருக்கும் கேட்கின்றவாறு அமைதியடைந்திருந்த சபையில் 'இஸ்லாம் வட துருவம் என்றால் சோஸலிஸம் தென் துருவம்' என்ற தன்னுடைய கருத்தை நிறுவி மேடையில் இருந்து இறங்கினார். அவர் பிரகடனம் செய்தது போலவே அந்த சபையின் நடுவர்களுக்கு அவரின் பேச்சுக்கு ஒரு ஆறுதல் பரிசைத்தானும் கொடுக்கும் மனோநிலை கூட ஏற்பட்டிருக்கவில்லை. இது அஷ்ரஃப் அவர்களின் நேர்மைக்கும் தைரியத்துக்கும் உறுதிப்பாட்டிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பின்னர் சட்டக் கல்லூரிக்குத் தெரிவாகி அங்கும் கூட கல்வித்துறையிலும் விவாதத்துறையிலும் தலைமைத்துவத்திலும் அஷ்ரஃப் பிரகாசித்தார். எனினும் அக்காலத்தில் அவரது தந்தையின் பொருளாதாரம் இறங்குமுகமாக இருந்ததினால் இலவசக் கல்வி முறைக்குள் வராத சட்டக் கல்லூரியின் கற்றலுக்கும் நூல்களுக்குமான ஆகுசெலவுக்கு அவரின் தந்தையார் ஈடுகொடுக்கப்படுகின்ற துயரங்களை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் தன்னுடைய கல்வியைத் தொடர அஷ்ரஃப் பின்வாங்காது தனக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்ளும் உபாயமாக சிறு வணிக முயற்சியில் ஈடுபட்டார். அப்போது இறக்குமதிகள் முற்றாகத் தடை செய்யப்பட்டிருந்தன.

அதனால் இந்தியாவின் பளேகாட் சாரனுக்குப் பதிலாக மருதமுனைச் சாரன்களுக்குப் பெரும் கிராக்கி இருந்தது. அதனால் அஷ்ரஃப் மருதமுனைச் சாரன்களை தருவித்து கொழும்பில் மொத்த வியாபாரிகளிடம் கொடுப்பதும் பின்னர் கொழும்பிலிருந்து ஊர் வரும்போது இங்கு கிராக்கியாக இருந்த 'பலப்பிட்டி' சாரன்களை இங்கு எடுப்பித்து மொத்த வியாபாரிகளுக்குக் கொடுப்பதும் எனும் முறையில் தன்னுடைய வியாபாரத்தைச் செய்து அதன்மூலம் சில கணிசமான அளவுக்கு வருமானம் பெற்று தன்னுடைய கல்விக்கான பணத்தைப் பெற்றுக் கொண்டார்.

## வாண்மைத் தொழில்:

*1972இல் சட்டத்தரணியாக வெளியேறிய இவர் சிறிது காலம் அரச அலுவலகத்தில் அரச சட்டத்தரணியாகப் பணியாற்றி பின் இராஜினாமாச் செய்தார். இக்கட்டத்தில் அவர் எழுதிய சிறுகதையான "நீதிக்காகப் போராடுகின்றான் ஒரு சட்டத்தரணி"மிகவும் சிலாகித்துப் பேசப்பட்டது. அரச சட்டத்தரணிப் பதவியை இராஜினாமாச் செய்த பின்னர் கல்முனை, மட்டக்களப்பு ஆகிய நீதிமன்றங்களில் மிகப் புகழ்பெற்ற சட்டத் தரணியாக தான் 1984இல் உயிர்தப்பி ஓடும்வரை பணியாற்றியுள்ளார்.*

## இல்லறம்:

*1975 மே மாதம் முதலாம் திகதியில் அஷ்ரஃப் அவர்களுக்கும் கம்பளை யைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் இஸ்மாயில் என்று அழைக்கப்பட்டவரின் சிரேஷ்ட புதல்வியாகிய மருத்துவத்துறை மாணவி ஃபேரியல் என்ப வருக்கும் கம்பளை பள்ளிவாசலில் திருமணம் நடைபெற்றது. இது அஷ்ரஃபின் தந்தையாரின் சம்மதத்துடனோ அனுமதியுடனோ நடைபெற்றிருக்கவில்லை. இது ஒரு காதல் திருமணமாகும். இவர்களின் காதலின் ஆரம்பமே ரெயில் பயணத்தில் என்று அவர்களின் நண்பர்கள் சுவாரஷ்யமாகச் சொல்வர். இவர் கண்டி நீதிமன்றத்தில் அரச சட்டத் தரணியாக சட்டவாதம் சென்ற போது புகையிரதத்தில் தட்டுத்தடுமாறி ஏறிக்கொண்டிருந்த ஒரு வைத்தியக் கல்லூரி மாணவிக்கு விபத்து நிகழ்ந்துவிடாமல் பாதுகாக்கப்போய் அதுநட்பாகி காதலில் முடிந்ததாம்.*

இருவருமே தங்கள் மனங்களை ஒருவர் மீது ஒருவர் பறிகொடுத்து விட்டனர். ஃபேரியலின் அழகும் ஆங்கிலமும் இங்கிதமும் அஷ்ரபைக் கவர்ந்திழுக்க அஷ்ரஃபின் அழகும் கம்பீரமும் புத்தி சாதுரியமும் பேரியலை ஆட்கொண்டது. ஃபேரியலும் அவர் குடும்பமும் பேரியலின் மருத்துவத்துறை கல்வியை இடை நடுவில் குழப்ப சம்மதிக்காத போதும் திருமணம் அவரின் கல்வி முடிவடையும் முன்னரேயே முடிந்துவிட்டது.

கிழக்கின் பாரம்பரியத்துக்கு அமைவாகத் தன்னுடைய ஆசைகளினதும் கனவுகளினதும் எதிர்பார்ப்புக்களினதும் அத்திபாரமான தனது ஏக புதல்வனை தன்னுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறாக யாரும் தட்டிக் கொண்டு போவதை கிழக்கின் எந்தத் தந்தையும் அங்கீகரிக்கும் மனோநிலை இப்போதே இல்லாமல் இருக்கும்போது அப்போது எப்படி இருந்திருக்கும். இதனால் அழைப்பிதழ் கூட அச்சடிக்கப்படாமல் அந்தத் திருமணம் மிக எளிமையாக நடைபெற்றது.

1975 மே மாதம் முதலாம் திகதி கம்பளைப் பள்ளிவாசலில் நடைபெற்ற அந்தத் திருமணத்தை நடாத்தி வைத்தவர் அவரின் இளமைக்கால நண்பர் வரலாற்றிலோர் ஏடு புகழ் மௌலவி ஏ.ஸி.ஏ.எம்.புஹாரி அவர்களாவார். இதில் அவரின் நண்பர்களாக இருந்த சட்ட தரணிகளான ஸுஹைர், அமீன், கபூர் முதலியோரும் மற்றும் ஊடகவியலாளர் எம்.பி.எம். அஸ்ஹர், ஹாபிஸ் அஹமட் லெவ்வை உட்பட்ட இன்னும் சிலரும் கலந்து கொண்டனர். திருமணத்தின் பதிவாளராகக் கடமையாற்றியது இன்றைய பிரதியமைச்சர் காதர் ஹாஜியார் அவர்களாவார் என்றும் நண்பர்கள் குறிப்பிடுகின்றனர்.

திருமணம் முடிந்து கல்முனைக்கு வந்ததும் கல்முனை தமிழ்ப் பிரதேசத்தில் வீடொன்றை எடுத்து அதில் அஷ்ரஃப் குடியேறினார். அந்த வீட்டுக்கு 'ஹிறா' என்று பெயரிட்டிருந்தார்.

இன்னும் தந்தையார் கோபத்துடன் இருந்ததால் அவரை மனம் மாற்றி எடுக்கும் வரை தாயாரையோ சகோதரிகளையோ அஷ்ரஃபினால் சந்திக்க முடியவில்லை. அவரின் தந்தையை வழிப்படுத்தி எடுக்கும் பொறுப்பை

அவரின் நண்பர்களான முஸ்தபாவும் சட்டத்தரணி சிவபாலனும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மிகவும் கண்டிப்பானவர் என்று பெயர் பெற்ற ஹூசைன் விதானையாரை வழிப்படுத்தி எடுப்பது இவ்விருவருக்கும் குதிரைக் கொம்பாகவே இருந்தது. தந்தையாரும் இறுதியில் மனம் இரங்கினார். கண்டிப்பான விதானை என்றாலும் பெற்ற மனம் பித்துதான். மூவருமாக அஷ்ரஃபின் வீட்டுக்குச் செல்லும் மனோ நிலையை உருவாக்குவதில் நண்பர்கள் வெற்றிபெற்று விட்டனர். அப்போது அஷ்ரஃப் தன் தந்தையைக் கட்டிப் பிடித்து அழுத காட்சியை இப்போதும் முஸ்தபா கண்ணீர் மல்க வர்ணிப்பார். பின்னர் தாயாரும் சகோதரிகளும் புறப்பட்டு வந்து அஷ்ரஃபின் இல்லத்தை அடைந்தனர். பின்னர் அந்த வீடே குதூகலித்தது.

## இயக்கங்களும் அரசியலும்

1976 இல் முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற அரசியல் இயக்கத்தை அவர் ஆரம்பிக்க எண்ணினார். இந்தியாவில் முஸ்லிம் லீக் என்ற அரசியல் ஸ்தாபனம் இந்திய முஸ்லிம்களை ஐக்கியப்படுத்தி வழி நடாத்திக் கொண்டிருந்தமை போல இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தைப் பேண இலங்கை முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கம் உருவாக்கப்படல் வேண்டும் என்பதே அவரின் விவாதத்தின் சுருக்கமாக அமைந்திருந்தது. அது மட்டுமன்றி மணிவிளக்கு என்ற சஞ்சிகை இந்திய முஸ்லிம்களை வழிநடாத்துவதுபோல இலங்கை முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்த ஒரு பத்திரிகை அவசியம் என்ற ஒரு கருத்தும் அதில் தொனித்தது.

அதன் அடிப்படையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் 'சமத்துவம்' என்ற பத்திரிகையும் அஷ்ரஃப் அவர்களை அச்சாணியாகக் கொண்டு 1976 இல் தோற்றம் பெற்றன. முஸ்லிம் ஐக்கிய முன்னணியில் தலைவராக அட்வகேட் சம்சுதீன் அவர்களும் அதன் மாசிகையான சமத்துவத்தின் ஆசிரியர்களாக கவிஞர் அன்பு முகைதீன் மற்றும் எழுத்தாளர் அ.ஸ. அப்துஸ்ஸமது அவர்களும் தொழிற்பட்டனர். எனினும் அவற்றின் மூச்சும் பேச்சுமாக இருந்தவர் அஷ்ரஃப் அவர்களேயாவார்.

அஷ்ரஃப் அவர்களிடம் இப்படியான ஓர் அபிப்பிராயம் முளை விடுவதற்கும் உரம் பெறுவதற்கும் மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி அவர்களது சிந்தனையும் அவரின் இயக்கமான ஜமாஅதே இஸ்லாமியும் பெரிதும் உத்வேகம் அளித்தன. அஷ்ரஃப் அவர்கள் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு மௌலானா மௌதூதி அவர்களின் சிந்தனை காரணமாக அமைந்தமையைப்போல இலங்கையின் ஜமாஅதே இஸ்லாமியும் காரணமாய் அமைந்து விட்டது.

ஏனெனில் அப்போதைய இலங்கை ஜமாஅதே இஸ்லாமியினதும் கல்முனையில் அதன் மாணவ அணியான இஸ்லாமிய பயிற்சி மன்றம் எனும் அமைப்பினதும் முக்கிய இயங்கு சக்தியாக இருந்த அஷ்ரஃப் பாகிஸ்தானின் ஜமாஅதே இஸ்லாமியை ஒத்ததாக இலங்கை ஜமாஅதே இஸ்லாமி இலங்கை முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சியாகப் பிகடனப்படுத்த வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தார். ஆனால் நிதானத்துக்குப் பெயர்போன அமைப்பாக இருந்த இலங்கை ஜமாஅதே இஸ்லாமியினர் அதற்கான காலம் இன்னும் இலங்கைச் சூழலில் கனியவில்லை எனும் நிலைப்பாட்டை எடுத்திருந்தனர்.

இதனால் அஷ்ரஃப் அதனை விட்டும் பூரணமாக அந்நியமாகி முஸ்லிம் ஐக்கிய முன்னணியை வடக்குக் கிழக்கை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார். அதற்கு முன்னரும் கூட முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் அஷ்ரஃப் ஓர் ஸ்தாபனத்தை நடாத்தி வந்தார். அதுதான் அப்போதைய கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் அவர்களின் முஸ்லிம் நடனம் தொடர்பான கருத்துருவாக்கத்தினால் கோபங்கொண்டு 'அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்' என்ற ஒரு நூலை எழுதி அவ்வியக்கத்தின் ஃபேயரியல் வெளியிட்டார்.

**1977** ஆம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முஸ்லிம் ஐக்கிய முன்னணி கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், புத்தளம் முதலிய தொகுதிகளிலே போட்டியிடக் களமிறங்கிற்று. இந்தக் கட்டத்தில் முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதாவது மேற்படி அனைத்து தொகுதிகளிலும் முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய

சூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்த அனைத்து தொகுதிகளிலும் முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகும் சந்தர்ப்பத்தை இழந்த போதிலும் தமிழ் முஸ்லிம் ஐக்கியமானது மிக உச்ச நிலையில் பேணப்பட்டது.

இந்தக் கால கட்டத்தில்தான் தமிழ் இளைஞர்களை விழித்து 'தமிழீழத்தை அண்ணன் அமிர்தலிங்கம் பெற்றுத்தராமல் விட்டாலும் இந்தத் தம்பி அஷ்ரஃப் பெற்றுத்தருவான்" என்று உரத்த தொனியில் மிகுந்த உற்சாகத்துடன் அஷ்ரஃப் பிரகடனம் செய்தார்.

இதற்கிடையே ஐக்கிய தேசியக் கட்சி 1977ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஜே. ஆர் ஜெயவர்த்தனா அவர்களின் தலைமையில் 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்தக்கட்டத்தில் 1972 இன் அரசியலமைப்புச் சட்டத்தையும் விட சிறுபான்மையினரை மேலும் மேலும் சிக்கல்களுக்குள் மாட்டிவிடத்தக்கதாக 1978இன் அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டது. தேர்தல் முறையில் கூட தொகுதி வாரிப் பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக தற்போது நடைமுயிலுள்ள விகிதாதாரப் பிரதி நிதித்துவ முறை அறிமுகம் செய்யப்பட்டது.

அந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவம் சிறுபான்மையினர் குரல்களை நயவஞ்சகமாக நசுக்கியது. இதனால் தமிழ் முஸ்லிம் அரசியல் கலப்புத் திருமணமானது மேலும் வலுப்படுவதற்கான நிலைமையே உருவாகி வந்தது. இதனால்தான் தலைவர் அஷ்ரஃப் தமிழ் இளைஞர்களைப் பார்த்து மேற்சொன்னவாறு கூறி உற்சாகப்பட்டார்.

இந்த சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகள் முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் இயக்கம் ஒன்றை ஸ்தாபிப்பதை மேலும் மேலும் நியாயப்படுத்தின. இதற்கிடையில் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்த பலர் பாரம்பரிய அரசியல் பண்பாட்டோடும் தேர்தலுக்கு வேட்பாளராகும் முனைப்போடும் நின்றவர்களேயாவார்கள். இவர்கள் சமூக அரசியல் என்ற எண்ணக் கருவை தனிப்பட்ட அபிலாஷைகள் என்ற எண்ணக்கருவுடன் போட்டு இணைத்துக் கனவு கண்டமையானது அஷ்ரஃப் அவர்களின் சமூக

அரசியல் தொடர்பான எண்ணக்கரு முஸ்லிம் ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில் பலவீனமடையக் காரணமாகிற்று.

இதற்கிடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் ஒரு நடவடிக்கையாக அதிகாரத்தைப் பரவலாக்குதல் என்ற எண்ணக்கருவுடன் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை மாவட்டந்தோறும் உருவாக்க மாவட்ட அபிவிருத்திச் சபை சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. இதன் அடிப்படையில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டது.

1977ஆம் ஆண்டைய பாராளுமன்றத் தேர்தலைப்போல முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒற்றுமையுடன் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை எதிர் கொள்ளல் வேண்டும் என்பதில் தலைவர்களான அஷ்ரஃபும் அமிர்தலிங்கம் சிவசிதம்பரம் போன்றவர்களும் வலுவாக உடன்பட்டிருந்தனர். அதன்படி மட்டக் களப்பு, திருகோண மலை ஆகிய மாவட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளரின் தலைமையில் தேர்தலுக்கு நிற்றல் என்றும் முஸ்லிம் ஐக்கிய முன்னணியால் உடன்பாடு காணப்பட்டது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் நிலைமையானது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டம் என்பதினால் தமிழர் விடுதலைக் கூட்டணி முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரை தலைமை வேட்பாளராகப் போட்டியிட உடன்பாடு காணவேண்டும் என்பது அஷ்ரஃபின் நிலைப்பாடாக இருந்தது. தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தலைமையும் இதற்கு ஆரம்பத்தில் எதிர்ப்பைத் தெரிவிக்க வில்லை.

ஆனாலும் நாட்கள் நெருங்க நெருங்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிழக்குத் தலைமைகள் கட்சியின் பொது ஒருமைப்பாட்டில் திருப்திப்படாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டனர். அரசியலில் பொது ஐக்கியப்பாடு என்ற கருதுகோளை விட தமிழர் விடுதலைக் கூட்டணியின் வளர்ச்சிக்காக மாவட்ட ரீதியிலும் தேசிய ரீதியிலும் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் கூட்டணியின் அம்பாறை மாவட்டத் தலைமையாக திரு வேல்முருகு மாஸ்டரை தலைமை வேட்பாளராக நிறுத்தியாக வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்தனர்.

வேல் முருகு என்ற போராளியை இழக்க முடியாது என்பதும் கிழக்கு மாகாண மக்களின் வேண்டுதலை வெறுமனே கூட்டணியால் புறக்கணிக் கணிக்கப்படக் கூடாது என்பதும் கூட்டணியைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாததாகும். எனினும் பொது உடன்பாடு கண்ட ஒரு தர்க்கவியல் நியாயவாதத்தை அரசியல் சந்தர்ப்பவாதத்திடம் தோற்கச் செய்கின்ற தவிர்க்க முடியாத ஒரு தீர்மானத்தை கூட்டணி எடுத்தே விட்டது.

தருக்கவியல் நியாயவாதத்தின் அடிப்படையிலும் அதிகாரப் பகிர்வின் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருவின் அடிப்படையிலும் அம்பாரை மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளரை தலைமை வேட்பாளராகப் போடுதலின் தவிர்க்க முடியாமையானது முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமான கலப்புத் திருமணத்தில் விரிசலை ஏற்படுத்தியது. முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் 'தலாக்' கோரி வழக்குப் பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனால் இத்தேர்தலுக்கு முகங் கொடுக்கும் எண்ணத்தையும் முஸ்லிம் ஐக்கிய முன்னணி கைவிட்டு விட்டது.

இத்தகைய காரணங்களினால் தன்னுடைய சிந்தனைக்கு வலுச் சேர்க்க 1978ஆம் ஆண்டின் அசியலமைப்பின் சிறுபான்மை விரோதத் தன்மை களைப் புத்திபூர்வமாகப் பரிந்து கொண்டவர்களை ஒன்றிணைத்து புத்தம் புதியதோர் அரசியல் இயக்கத்தை உருவாக்குவதற்கான முயற்சியை அஷ்ரஃப் மேற்கொண்டார். இதன் விளைவாகத்தான் 1980 செப்டம்பர் 21ஆம் திகதி காத்தன்குடியிலுள்ள பாலர் பாடசாலை ஒன்றில் காத்தான் குடி உள்ளூராட்சிமன்றத் தவிசாளர் அல்ஹாஜ் அஹமட் லெவ்வை அவர்களின் தலைமயில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கினார்.

மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுடன் விகிதாசாரப் பிரதி நிதித்துவம் (Proportional Representation System) 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இவ்வளவு நாளும் பேணப்பட்ட வகையி லாவது கிடைக்குமா என்ற பலமான சந்தேகம் அரசியல் சார்ந்த விழிப் புணர்வு உள்ளவர்கள் மத்தியில் ஏற்படத் தொடங்கிற்று.

இச்சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அன்றிலிருந்து 1980 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி வரை இது தொடர்பான கூர்மையான சிந்திப்பும் வாசிப்பும் கணித்தலும் முஸ்லிம் வெகுஜன மட்டத்துக்கு கொண்டு சேர்க்கப்பட வில்லை. அதற்கு அன்றைய முஸ்லிம் பிரதிநிதிகளின் கைகள் இறுகக் கட்டப்பட்டிருந்தமை பிரதானமான காரணியாகும்.

எனினும் ஒரு புத்திசாலித்தனமான முயற்சி என்றாலும் சரி அல்லது சிறு பிள்ளைத் தனமான முயற்சி என்றாலும் சரி அல்லது இறைவனின் நாட்டப்படி என்றாலும் சரி 1980 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி இது தொடர்பாக சுமார் 30-40 கிழக்கு மாகாண முஸ்லிம்களைக் கொண்ட ஒரு மகாநாடு காத்தான்குடி உள்ளூராட்சி மன்றத் தவிசாளர் அஹமட் லெவ்வை ஹாஜி அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனைக் கூட்டியவர் சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களாவார். இதுதான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபக மாநாடாகும்.

அதில் குறிப்பாக ஏ.ஸி.ஏ.எம். புஹாரி மௌலவி, அபுல் ஹஸன் மௌலவி, குணம் மாஸ்டர், எழுத்தாளர் அ.ஸ அப்துஸ்ஸமது, சட்டத்தரணி அப்துல் கபூர், பாலமுனை சம்சுதீன் சட்டத்தரணி, கவிஞர் அன்பு முகைதீன், மருதூர்க்கனி, காத்தான்குடி ஜவாட் பி.ஏ, மஃறூப் கரீம், முகைதீன் ஹாஜியார் மற்றும் வை. அஹமட் முதலியோர் கலந்து கொண்டுள்ளனர். இந்தக் கூட்டத்தை சிறப்பாக நடாத்துவதற்கு ஜவாட் பீ.ஏ மிகக் கடினமாக உழைத்தார். அதில் செயலாளராக சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் தெரிவு செய்யப்பட்டார்.

அன்று கூடிய கூட்டம் விகிதாசாரப் பிரதி நிதித்துவம் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவ உரிமையானது நயவஞ்சகமாக குறைக்கப் படுவதற்கான அனைத்து சட்ட முடிச்சுக்களையும் போட்டிருப்பதை பிரக்ஞை பூர்வமாக விளங்கிக் கொண்டது. அதாவது இன்னும் ஒரு முறை அமிர்தலிங்கம் போன்ற சிறுபான்மையைச் சேர்ந்தவர்கள் எதிர்க் கட்சித் தலைவராக வந்து சிறுபான்மையினருக்கு பேரினவாதம் நயவஞ்சகமாகச் செய்யும் அநீதிகளை சர்வதேச சமுகத்தின் கவனத்துக்கு கொண்டு வரக்கூடாது என்பதற்காக வரையப்பட்ட ஒரு சூனிய முடிச்சு என்பதை அந்தக் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தோர் வெட்ட வெளிச்சமாக அன்று உணர்ந்து கொண்டனர்.

எனினும் அன்று தொடங்கப்பட்ட அந்த அரசியல் இயக்கமானது எந்த விதமான அரசியல் வீரியத்தையும் கொண்டிருக்கவில்லை. அதற்கான முக்கிய காரணம் இத்தகைய ஓர் அரசியல் இயக்கத்தை முற்றுமுழுவ துமாக எந்தவித சுயநல இழப்புக்களையும் சம்மதிக்கத் தயாரில்லாத ஒரு மக்கள் கூட்டத்துடன் கொண்டு செல்ல முடியுமா என்ற அவநம்பிக்கை அதன் அச்சாணியாகத் தொழிற்பட்ட அஷ்ரஃப் அவர்களின் அடிமனதில் எழுந்திருக்கக் கூடும்.

ஏனெனில் 1980 இல் இவ்வியக்கம் தொடங்கப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இரண்டு முக்கியமான வரலாற்றுத் தவறுகள் நடந்திருக்கின்றன. அதில் பிரதானமான தவறு அல்லது விமர்சனம் அவ்வியக்கம் தொடங்கப்பட்ட பின்னரும் அதாவது 1982 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரின் தேர்தல் மேடையில் அஷ்ரஃப் அவர்கள் ஒரு மொழி பெயர்ப்பாளனாகத் தோன்றியமையாகும். அப்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் இயக்கத்தின் சகபாடிகளாக இருந்த பலர் இச்சம்பவத்தால் ஒரு கொள்கை ரீதியான தடுமாற்றம் அல்லது பலவீனம் அல்லது உறுதியின்மை எனும் நோய்க்கு தமது தலைமை உள்ளாகி இருப்பதாக கருதத் தொடங்கினர்.

அது மட்டுமன்றி 1984 இல் இலங்கை அரசு இஸ்ரேல் நாட்டின் இராஜதந்திரத் தொடர்புகளுக்கான ஆரம்ப முயற்சியாக இஸ்ரேல் நலன் பேண் பிரிவை இங்கு ஏற்படுத்தியபோது அதனால் மிகுந்த குழப்பத்துக்கு உள்ளாகியவர்களில் அஷ்ரஃபும் ஒருவராவார்.

முடிவாக 1984 செப்டம்பர் மாதத்தின் ஒரு வெள்ளிக்கிழமை வடக்குக் கிழக்கு முதலாக நாடெங்கிலும் பரவலாக ஏற்பாடாகி இருந்த ஹர்த்தாலுக்கு மு.கா சார்பில் ஒரு துண்டுப் பிரசுரமும் அஷ்ரஃப் அவர்களாலேயே எழுதப்பட்டு பத்தாயிரம் பிரதிகளும் கல்முனை குட்வின் ஓட்டோ அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு விட்டது.

இந்த வேலைகளில் கவிஞர்களான எச்.எம். பாறூக், டொக்டர் நூர்டீன், கலீல் முதலியோர் தீவிரமாக ஈடுபட்டனர். ஆனால் துரதிஷ்டவசமாக திடீரென்று குறித்த தினத்தில் அப்பிரசுரத்தின் விநியோகம் காரணம் புரியாமல் முடக்கப்பட்டு விட்டது.

தொடர்ந்த வாரத்தில் இது பற்றிய விவாதங்கள் நடைபெறக் கூடிய பாதுகாப்புச் சூழ்நிலைகள் இல்லாமையினால் அந்த விவாதங்கள் நடைபெறவே இல்லை. நிந்தவூரைச் சேர்ந்த அலியார் என்பவர் ஊர்வலத்தில் வைத்து சுடப்பட்டது இந்த சந்தர்ப்பத்தில்தான். அப்படியான ஒரு பாதுகாப்புச் சூழல் அப்போது காணப்பட்டது.

அன்றைய தேசிய பந்தோபஸ்து பிரதியமைச்சரான லலித் அத்துலத் முதலிக்கும் அஷ்ரஃப் அவர்களுக்கும் இருந்த சட்டக்கல்லூரி ஆசிரியர் - மாணவர் உறவும் அதன் அடிப்படையிலான நட்புதலும் மட்டுமன்றி இது தொடர்பான மேற்சொன்ன பொதுப் பாதுகாப்பின் மீதான அச்சமும் காரணமாகும் என்று அப்போது மு.காவின் உறுப்பினர்களான இளைஞர்கள் கருத்து வெளியிட்டனர். இச்சம்பவத்தால் சிலர் மு.காவின் சந்திப்புகளில் மேற்கொண்டு கலந்து கொள்வதனையும் தவிர்த்திருந்தனர்.

இவ்வாறுதான் மு.கா. பிரசவிக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் எழவும் முடியாமல் விழவும் முடியாமல் தனக்குள்ளே ஒரு கையறு நிலையில் 1983க்கும் 1986க்கும் இடைப்பட்ட காலத்தில் காலத்தைக் கடத்தியது.

அஷ்ரஃப் அவர்களின் பின்னணியில் தொழிற்பட்ட அன்று தத்தித் தத்தி நடைபயின்ற அந்தக் கட்சியானது 1986இல்தான் தன்னை அரசியல் கட்சியாகப் பிரகடனப்படுத்தி பின்னர் பதிவு செய்ய விண்ணப்பித்தது.

# இலங்கையின் பல்வகைமைப் பண்பும் எம்.எச்.எம். அஷ்ர.்.பின் அரசியலும்

றமீஸ் அப்துல்லா

அஷ்ரஃப் என்றால் யார் என்ற விபரம் நம் எல்லோருக்கும் தெரிந்தது. அவரைப் பற்றிச் சிறிய பிள்ளைகளும் நிறையத் தெரிந்து வைத்துள்ளனர். ஆனால், அஷ்ரஃப் எதனை விரும்பினார் அவரை நாம் எப்படிப் புரிந்து கொள்வது என்பது பற்றி நிறைய அறிய வேண்டியுள்ளது. அஷ்ரஃப் இன்னும் மக்களுடைய மனங்களிலிருந்து அகலவில்லை. அவர் பிறந்த தினத்தையும் மறைந்த தினத்தையும் மக்கள் இன்றும் நினைத்துப் பார்க்கின்றனர். வாய்மொழி இலக்கியத்தில் கூட அவரது அகன்ற நெஞ்சையும் வட்ட முகத்தையும் எறிந்து எறிந்து நடக்கும் முழங் கால்களையும் மொத்தமாக அவர் தோற்றப் பொலிவைப் பாடுகிற மரபு இன்னும் உண்டு.

"தங்கம்போல் மேனி
தளதளத்த கண்ணொளிவு
முத்துப்போல் பல்லு
அவர்ர முகத்தெளிவு
நாங்க காணுறெப்போ

மொட்டத் தலையும்
மொழகு நிறக் கண்மொழியும்
சித்திரம் போல் நெத்தியும்
றகுமான் இந்த சீமயிலே
நாங்க காணுறப் போ

கொத்தமல்லி கோமதகம்
குங்குமப் பூ குங்கிலிங்கம்
சாம்புராணி கற்பூரமே
தலைவர நாங்க எங்க தேடிக் கண்டெடுப்பம்

மாணிக்க ரத்தினமே
மாறா ஒளித் தங்கமிது
எங்கிட கல்பு நிறஞ்ச கனி
உங்கள நாங்க காணுவது எக்காலம்"

அவருடைய வருகைக் காட்சியையும் அவர் மீதும் அவர் கட்சியின் மீதும் இருந்த அபார நம்பிக்கை பற்றியும் அக்கட்சியின் சின்னத்தைப் பற்றியும் அக்கட்சி கொண்டாடும் மஞ்சளும் பச்சையும் கலந்த நிறம் பற்றியும் இன்னும் மக்கள் விசுவாசம் கொண்டுள்ளனர்.

இதற்கு மத்தியில்தான் குத்துநிலையாக வளர்ந்த அவரது கட்சியைப் பற்றியும் அவருடைய அரசியல் செயற்பாடு பற்றியும் நாம் பேச வேண்டி இருக்கிறது. எந்த விடயத்திலும் மறு பக்கத்தைப் பார்ப்பது மிக சுவாரஸ்யமான ஒரு அம்சமாகும். Other Side என்ற பெயரில் ஒரு ஆங்கிலத் திரைப்படம் கூட வெளிவந்துள்ளது. ஓர் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பற்றிப் பேசுவதற்கு மறுபக்கம் மிக முக்கியமாக அமைகின்றது. ஊடகங்கள் தருகிற தகவல்களை அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. அது பற்றி விவாதத்திற்கு உட்படுத்துவதும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் விசாரிப்பதும் மிக முக்கியமாகும். இதனூடாகவே நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

இன்று முஸ்லிம்களின் அரசியல் பயணம் பற்றி அறிவதற்கு முஸ்லிம் தேசம் மறுபக்கம், முஸ்லிம் காங்கிரஸ் மறுபக்கம், அஷ்ரஃப் மறுபக்கம் என்றெல்லாம் பார்க்கப்படுகிற போது நாம் சில விபரங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அஷ்ரஃபைப் பற்றி நேர்மையான ஆய்வுகள் இன்னும் பெரிதாக வரவில்லை. அனிஸ்டஸ் ஜெயராஜ், எஸ்.எச். ஆதம்பாவா, ரவூப் ஹக்கீம், எம்.எல்.ஏ. காதர், ஏ.ஸி.ஏ.எம். புஹாரி முதலானவர்கள் சிலவற்றை எழுதியும் தொகுத்தும் உள்ளனர்.

அஷ்ரஃப் ஒரு இயக்கவாதி, நல்ல மாணவனாகவும் நல்ல சமூக வாதியாகவும் நல்ல சமயவாதியாகவும் பேர் பெற்றவர். முஸ்லிம் சமூகத்துக்குள்ள சமயம் சார்ந்த இயக்கங்களான தப்லிக் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாம் முதலானவற்றோடு ஈடுபாடு கொண்டவர். ஈழத்தின் பிரபலமான இலக்கியவாதிகள் நுஃமான், சோலைக்கிளி, எச்.எம். பாறுக் முதலானவர்கள் இவரது இலக்கிய நண்பர்களாக இருந்தவர்கள்.

அரசியல் பாதையில் பயணிக்க விரும்புபவர்கள் நல்ல குடும்பப் பாரம்பரியத்திலும் சொந்த ஊரில் இருந்தும் மணப்பெண்ணை எடுக்க விரும்புவர். ஆனால், இந்த இடத்தில் அஷ்ரஃப் தனது பிரதேசத்தையே சாராத தனது ரெயில் பயணக் காதலியையே கரம்பற்றிக் கொண்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி முதலானவற்றில் எல்லாம் அரசியல் ஈடுபாடு கொண்டிருந்த அவர் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரச்சார மேடைகளில் "அண்ணன் அமிர்தலிங்கத்தினால் தமிழ் ஈழத்தினைப் பெற்றுத்தர முடியாவிட்டால் தம்பி அஷ்ரஃப் பெற்றுத் தருவான்" என்று கோஷமிட்டவர். 1981இல் மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலின்போது கூட்டணியோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 1981.09.21ஆம் திகதி அஷ்ரஃப் காத்தான்குடியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கத்தை உருவாக்கினார். 1984இல் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டின் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்து வதற்காக எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லை. முஸ்லிம் லீக், முஸ்லிம் வாலிப முன்னணி முதலானவை அரசியல் அமுக்கக் குழுக்களாகவே செயற்பட்டன.

இக்காலகட்டத்தில் இன்னொரு பக்கம் கல்முனைப் பிராந்தியத்தின் தமிழ் - முஸ்லிம் முரண்பாடு உருவாகத் தொடங்கியது. அதனுடைய உச்சக்கட்டமாக 1985 காரைதீவுக் கலவரத்தைக் குறிப்பிட வேண்டும். இக்காலகட்டத்தில் அஷ்ரஃப் பற்றிய பல்வேறு தப்பபிப்பிராயங்கள் பேசப்பட்டன. இதற்கு மத்தியில்தான் 1986.01.29ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸின் ஆறாவது வருடாந்த மாநாடு கூட்டப்பட்டது. 1988.02.11இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக அங்கீகாரம் பெற்றது. இக்கட்டத்தில் வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

அஷ்ரஃபின் வரலாற்றில் 1989ஆம் ஆண்டு மிக முக்கியமான காலப்பகுதியாகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி முதலான வற்றிலெல்லாம் இருந்து அரசியலில் பங்குபற்றிய அஷ்ரஃப் முஸ்லிம் காங்கிரஸ் மூலமே பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அஷ்ரஃபுடைய அரசியல் வரலாற்றில் இது ஒரு முக்கியமான கட்டமாகும். அவரது நீண்டகால ஆசை ஒரு பாராளுமன்ற உறுப்பினராக ஆகவேண்டும் என்பதே. அது சாதாரணமான ஆசையல்ல நியாயமானதும் கூட. அந்த ஆசையை அவர் வெற்றிகரமாகச் செயற்படுத்தினார். ஓர் இனத்துவக் கட்சியின் மூலமாக, அதுவும் அவர் உருவாக்கிய கட்சியின் மூலமாக, அவர் தலைவராக இருந்த கட்சியின் மூலமாக அந்த ஆசை நிறைவேறியது.

இலக்கியவாதிகளான நுஃமான், சோலைக்கிளி, எச்.எம். பாறுக் முதலானவர்கள் இவரது இலக்கிய நண்பர்களாக இருந்தவர்கள். இதனுடைய அடுத்த கட்டமாக 1994ஆம் ஆண்டு பொதுஜன முன்னணி அரசாங்கத்திலே அமைச்சரவையின் ஓர் முக்கிய அங்கமாக அஷ்ரஃப் மாறுகிறார். இந்தக் காலகட்டத்தில் அவர் முன்வைத்த மிக முக்கியமான முன்மொழிவுகளே தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒலுவில் துறைமுகமுமாகும். அஷ்ரஃப் மிக தீர்க்கதரிசனமான, மிக புத்திசாலித் தனம் நிறைந்த ஓர் அரசியல்வாதி. தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கத்தின் போது இங்கு சிங்கள, தமிழ் மாணவர்கள் வந்து கல்வி கற்பார் என்பதனை அவர் அறியமாட்டாரா? துறைமுக நிர்மாணத்தின் போது சிங்கள ஊடுருவல் இப்பிரதேசத்தில் இடம்பெறும் என்பதனை அறியமாட்டாரா? நிச்சயமாக அவர் அறிவார். அஷ்ரஃப் எதிர்பார்த்தது என்ன? ஒரு பன்மைச் சமூகத்தையே, ஒரு பன்மை நாகரிகத்தையே, ஒரு பன்மை அரசியலையே அவர் விரும்பினார். தனித்துவ அரசியல் என்பது 1994இல் ஒரு வெற்று வார்த்தையாகவே மாறியது எனலாம்.

பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் அமைச்சராக இருக்கிறபோது 'அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்' என்று பிரசுரம் வெளியிட்ட அஷ்ரஃப் அவர்கள் 1994இலிருந்து இலங்கை அரசாங்கத்திலே ஒரு முக்கிய புள்ளியாக மாறினார். தேசிய ஐக்கிய முன்னணி எனும் NUA அரசியல் கட்சியை ஸ்தாபித்து அக்கட்சியின் சின்னமாக மரத்தை ஆக்குவதற்கும் முஸ்லிம் காங்கிரஸை மறுவடிவம் செய்வதற்கும் அவர் விரும்பினார். தேசிய ஐக்கிய முன்னணியின் மூலம் 2012இல் புதிய கனவுகளைப் பற்றி அவர் பிரஸ்தாபித்தார். மிகக் காத்திரமான அரசியல் யாப்பு நகல் ஒன்றினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இலங்கை அரசியலில் எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்தார். ஆனால்,

ஒரு தேர்தல் சூறாவளி இடம்பெறுகிற காலகட்டத்தின் சில நாட்களுக்கு முன்னர் ஒரு ஹெலிகொப்டர் விபத்தில் அஷ்ரஃப் மாயமாக மரணமடைந்தார்.

இன்று அஷ்ரஃப் உருவாக்கிய கட்சி எங்கே? அஷ்ரஃப் உருவாக்கிய பல்கலைக்கழகம், அஷ்ரஃப் உருவாக்கிய துறைமுகம் இவற்றையெல்லாம் சூழ பன்மைச் சமூகக் கட்டமைப்புச் சூழ்ந்திருக்கிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், முஸ்லிம் தேச இலக்கியம், முஸ்லிம் இலக்கியம் என்றெல்லாம் பேசப்படுகிற இக்காலகட்டத்தில்கூட அஷ்ரஃப் அன்று பேசியதும் கவனத்திற்குரியது:

"தமிழிலுள்ள எல்லா இலக்கிய முயற்சிகளையும் தமிழ் இலக்கியம் என்கிறோம். தமிழ் இலக்கியம் எனும் பெருங் கடலிலிருந்து இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற ஒரு புதிய பகுதியை தோற்றுவிப்பது, தமிழ் இலக்கியத்திற்கு இழைக்கப்படும் பெரும் நஷ்டமாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற சொற்றொடரை ஏற்றுக்கொண்டால், நாளைய தமிழ் இலக்கியம், பௌத்த தமிழ் இலக்கியம், கிறிஸ்தவ தமிழ் இலக்கியம், சைவ தமிழ் இலக்கியம், வைணவ தமிழ் இலக்கியம் என்ற புதுப் பிரிவுகள் ஏற்பட வழிவகுக்கும். அது மட்டுமன்றி மதப் பிரிவுகள் தமிழ் இலக்கியத்தைப் பங்கு வைக்கும் போது, இறுதியில் தமிழ் இலக்கியம் என்று சொல்வதற்கு ஒன்றுமே இல்லாத நிலை கூட ஏற்படலாம்.

மேலும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றிய இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்குப் பூரண சொந்தம் கொண்டாட முடியாத நிலையும் ஏற்படும்... இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என நாம் வகுத்துக் கொண்டிருப்பது அறிவு ரீதியாக ஏமாற்றிக் கொள்வதாகவே தோன்றுகிறது. எந்த ஒரு மொழியையும் மதங்களின் பெயரால் நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கக் கூடாது. திருவெம்பாவை, மணிமேகலை போன்ற பேரிலக்கியங்கள் இந்து, பௌத்த அடிப்படையில் தோன்றியதற்காக, அவற்றை நாம் இந்து தமிழ் இலக்கியம், பௌத்த தமிழ் இலக்கியம் என்றோ கூறப்போவதில்லை..."

இதிலிருந்து அஷ்ரஃப் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற தனித்துவத்தைக் கூட அங்கீகரித்ததாகத் தெரியவில்லை. அவருடைய கட்சிக் கீதங்களிலிருந்தும் சில எடுத்துக்காட்டுக்களைக் கூற முடியும்:

கண்களே கண்களே திறவாதே – எங்கள்
கனவுகளை நீ கலையாதே என்ற பாடலில் .....

கல்லோயா வருவாள் கடலினிலே உடல் கழுவ
பலநாட்டுக் கப்பல்கள் பொருளிறக்கப் போட்டியிடும்
பல்கலை வேந்தர்கள் பகலிரவாய் வலம் வருவார்
வெல்லமெனக் காதில் விழும்
வேத குர்ஆன் ஓதும் ஒலி
கோயில் மணியோசை நெஞ்சை நிறைக்கும்
தேவனருள் தவழ்ந்து வரும் ஆலயங்கள்
தித்திக்கும் தீகவாபி புத்தபிரான்
புகழ்பரப்பும்.

என்று அவர் காண்கின்ற கனவு ஒரு பன்மைச் சூழலையே வற்புறுத்துவதாக அமைகிறது. ஆனால், சம்பிக்க ரணவக்க என்ன கூறுகிறார்? 'அல்ஜிஹாத் அல்கைதா' என்ற நூலில் 'தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் அடிப்படைவாதத்தின் தொட்டிலாகும். இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் நெருப்புப் பந்தமே தென்கிழக்குப் பல்கலைக்கழம்' என்று எந்த ஆதாரமுமற்ற, அர்த்தமற்ற கருத்தை ரணவக்க முன்வைக்கிறார். ஆனால், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தந்தை அஷ்ரஃப் அப் பல்கலைக் கழகத்தை அப்படி எதிர்பார்க்கவில்லை.

சம்பிக்க ரணவக்க குறிப்பிடுகிற எம்.எச். முஹம்மட், பாக்கிர் மாக்கார், ஏ.சீ.எஸ் ஹமீட், ஹக்கீம், அஷ்ரஃப் போன்ற ஒருவரே சம்பிக்க ரணவக்கவும். இலங்கைப் பன்மைத்துவ அரசாங்கத்தின் பங்காளிகளே இவர்கள். இலங்கையின் தேசியத்திற்கும் பன்மைத்துவத்திற்குமாகக் குரலெழுப்பியவர்கள்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கும் எந்த சம்மந்தமுமில்லை. இங்குள்ள கல்வி நடவடிக்கைகள், மாணவர்களின் கலாசாரம், ஆசிரியர்களின் நிலைப்பாடு, நிருவாகச் செயற்பாடுகள் அனைத்துமே பன்மைத்துவம் வாய்ந்தது. உண்மையில் இங்கு மாணவர்கள் கற்கிறார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாக இருந்து பயில்கிறார்கள். அரசியல், சமய ஆதிக்கம் எதுவுமில்லை சுவரொட்டிகள் கூட இல்லை. கொழும்பிலே தென்கிழக்குப் பல்கலைக்

கழகம் பற்றி ஒரு பிரபலமான செய்தியுள்ளது. 'தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தேங்காய் பறிக்க வேண்டாம்' என்ற சுவரொட்டி மாத்திரமே உண்டு என்பதுவே அது.

சம்பிக்க ரணவக்க போன்றவர்களுக்கு நாம் நிறைய செய்திகளைச் சொல்ல வேண்டும். அஷ்ரஃப் அதனைச் செய்தார். சோமவன்ச தேரவுக்கு அவர் நிறைய பேசினார். சிங்கள சமூகத்திற்கு மத்தியில் ஒரு புரிதலை ஏற்படுத்தினார். அந்தப் புரிதலை மிகப் பக்குவமாக, நிதானமாக நமது அரசியல்வாதிகள் – அஷ்ரஃபின் சிஷ்யர்கள் பாராளுமன்றத்திற்குள் செய்வார்களா?

முஸ்லிம் காங்கிரஸின் கட்சிக் கீதத்தில் இப்படிச் சில வரிகள் வருகின்றன.

இலங்கையில் நாம் பிறந்தோம்
என்று நாம் மகிழ்ந்திடுவோம்
எல்லாமும் எம்மொழியே
நாமெல்லோரும் ஒரு குலமே

சமத்துவ அடிப்படையில்
சமூகங்கள் இணைந்திடுவோம்
சத்தியம் வென்றிடுமே
சமாதானம் ஓங்கட்டுமே

ஆகவே, அஷ்ரஃப் தென்கிழக்கில் ஒரு பன்மைச் சமூக நிர்மாணத்தை விரும்பினார். ஆட்சியில் ஆளுமையின் கீழ் தொழிற்பட விரும்பினார். இணக்க அரசியலைப் பேசினார்.

இன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு இருக்கின்ற பிரச்சினை யாது? ரவூப் ஹக்கீம் எதனைச் சிந்திக்கிறார்? அந்தச் சிந்தனைக்கான ஊன்றுகோல் இன்று அவரிடம் இல்லை. ரவூப் ஹக்கீம் தனியனாகிறார். சிலவேளைகளில் உட்கட்சிப் பூசலால் அவர் தனித்தும் விடப்படலாம். இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கின்ற நியாயமான எண்ணங்கள் முஸ்லிம் காங்கிரசுக்கு வரவேண்டுமென்றால் முஸ்லிம் சமூகத்தின் மறுபக்கம் பற்றிப் பேச வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய சுய விமர்சனம் உருவாக வேண்டும். அப்போதுதான் அஷ்ரஃபின் கனவுகள் நிறைவேறும். அஷ்ரஃபைச் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறி விடைபெறுகிறேன்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியும் அஷ்ர.்.பின் அபிலாஷைகளும்

**றமீஸ் அப்துல்லா**

*தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2012இல் ஸ்தாபகர் தின நிகழ்வில் அஷ்ரஃபின் அரசியல் பற்றி உரையாற்றிய ஞாபகம் இருக்கிறது. அஷ்ரஃ பின் பன்மைத்துவச் சிந்தனையைப் பல்வேறு ஆதாரங்களுடன் சமர்ப்பித்த நான் இன்று அச்சிந்தனை ஒழுங்கின் தலையாய அம்சமான தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பற்றி உரையாற்ற விரும்புகின்றேன். அதற்கு முன்னர் அஷ்ரஃப் பற்றிய ஒரு சிறிய அறிமுகத்தோடு என்னுடைய உரையை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கின்றேன். இங்கு அதிகம் பெண் மாணவிகள் இருப்பதால் பெண்களை அவர் எவ்வாறு அரசியல் மயப்படுத்தினார் என்ற செய்திகளையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும்.*

*மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் ஒரு யுக புருஷராகத் திகழ்ந்தவர். சிதறுண்டிருந்த இலங்கை முஸ்லிம்களை ஒன்றுபடுத்துவதில் ஓர் அமைதிப் புரட்சியை ஏற்படுத்தியர். தேசியக் கட்சியிலும் தமிழ்க் கட்சியிலும் அங்கம் வகித்த அஷ்ரஃப் முஸ்லிம் சமூகத்தை ஒரு தனிக் கட்சியின் கீழ் ஒன்றுபடுத்தி, பாராளுமன்ற அரசியலைத் துவக்கி வைத்தவர்.*

*முஸ்லிம்களை ஒரு தனிக்கட்சியாக ஒழுங்குபடுத்துவதற்கான சிந்தனையை மாத்திரம் அர்த்தப்படுத்தியவர் அல்ல அவர். அக்கட்சியைத் தேசிய பண்புகள் மிக்கதாகவும் உறுதியான – நெகிழ்வடையாத யாப்புடைய தாகவும் சிறப்பான கட்சிக் கட்டமைப்புக் கொண்டதாகவும் கட்சிக்கீதம், எழுச்சிப் பாடல்கள் கொண்டதாகவும் கட்டமைத்தார். இவை சமூகத்தின் மத்தியில் கட்சி பற்றியும், சின்னம் பற்றியும் தலைமைத்துவம் பற்றியும் மிகுந்த ஈர்ப்பை உருவாக்கியது.*

இது தவிர, சுமார் ஒரு தசாப்த கால தீவிர அரசியலில் ஈடுபட்ட தலைவர் அஷ்ரஃப் அக்கட்சி மூலம் அளப்பரிய சாதனைகளைப் புரிந்தார். இதனால் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் முஸ்லிம் காங்கிரசும் அதன் தலைமைத்துவமும் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டன.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரஃப் வெறுமனே, அரசியல்வாதியாகத் தன்னுடைய சமூக வாழ்க்கையைத் தொடங்கியவர் அல்ல. ஒரு நல்ல மாணவனாக, ஆளுமையுள்ள பேச்சாளனாக, சமய, சமூக இயக்கங்களில் ஈடுபாடுள்ளவராக, கவிஞனாக, சட்டத்தரணியாக, மொழியாற்றல் மிக்கவராகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். அதனால், ஆளுமைமிக்க தலைவராக அவர் விளங்கினார்.

முஸ்லிம்களின் நலன், அரசியல் அதிகாரம் என்பவற்றுக்கப்பாலே அவரது சிந்தனைகளையும் கனவுகளையும் அவரது கட்சியின் பிரச்சார – எழுச்சிப் பாடல்கள் ஊடாகக் காணமுடியும்.

முஸ்லிம் காங்கிரசின் பிரச்சாரப் பாடல்கள் அனைத்தும் தலைவர் அஷ்ரஃ பாலே ஆக்கப்பட்டது. தலைவரின் குணநலன்களை – அவரது குணநலன்களைப் பற்றிப் பின்வரும் பாடல் வெளிப்படுத்துகிறது.

நாட்டுக்கு நல்ல பிள்ளைதான்
முஹம்மது அஷ்ரஃப் தங்கப்பிள்ளைதான்
மக்கள் மனம் எல்லாமே அவரிடம்தான்
மனம் மகிழ்ந்து பாராட்டும் என் மனம்தான்....

பிரச்சாரப் பாடல்களில் ஒன்றான இதில் தலைவரின் பணிவான குணம், பொறுப்புள்ள தன்மை, பண்புகள், ஏழைகளோடான இணக்கம், இஸ்லாத்தின் மீதான பற்றுதல் முதலியன அழகாக எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.

இங்கு நிறையப் பெண் மாணவிகள் இருக்கிறீர்கள். தலைவர் அஷ்ரஃப் முஸ்லிம் சமூகப் பெண்களை அரசியல் மயப்படுத்துவதில் பெரும்பங்கெடுத்தார். அவரது மறைவுக்குப் பின்னர் அரசியல் பங்குபற்றுனர்களாகக் கூட அவர்கள் மாறியிருக்கின்றனர். கட்சியின் பிரச்சாரப் பாடல்களில் பெண்களின் வாழ்க்கைச் சித்திரத்தையும் முஸ்லிம் பெண்களின் விடுதலை பற்றியும் கோசம் எழுப்புகிறார்.

மூன்று நேரமும் சாப்பிட முடியாதவர்கள், சீதனமின்றி வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கட்டிய கணவன்மார் கைவிட்ட பெண்கள், வருமானமும் தன்மானமுமின்றி வாழும் பெண்களை எல்லாம் அவர் தட்டி எழுப்புகின்றார். பெண்கள் மீதான அடிமைச் சங்கிலியை உடைத்தெறிய அவர் கோசமிடுகிறார். முஸ்லிம் பெண்களின் பிரச்சினை தனியாகப் பேசப்பட வேண்டிய மிகப் பெரிய சமாச்சாரம். அந்தக் கனவுகளும் தலைவருக்கு இருந்தது. எங்கள் பெண்கள் வீண் பொழுதுபோக்குவதை அவர் தன் 'காக்காவண்டி' என்ற பாடலில் கண்டிக்கிறார். இஸ்லாமிய வாழ் நெறியைத் தமக்குள் கொண்டுவரவும் அவப் பொழுதுபோக்குவதை விட்டு நமக்குள்ள வளங்களைக் கொண்டு பயனுள்ள வாழ்க்கையாக்குமாறும் அவர் வற்புறுத்துகின்றார்.

.......................

பன்னிருக்குப் பாயிழைப்போம்!
மண்ணிருக்குப் பானை செய்வோம்!
தறியிருக்குப் பிடவ செய்வோம்!
தயிரிருக்கு நெய் கடைவோம்!
மிஷினிருக்கு உடுப்புத் தைப்போம்!
நம்ம காலுல நாம் நிற்போம்!.....

இவ்வாறு தலைவர் அஷ்ரஃப் முஸ்லிம் சமூகத்தைப் பல கோணங்களில் ஒன்று திரட்ட முனைந்தார். பெண்களின் வாழ்வைப் பயனுடையதாக்க – சமூகத்தின் ஊன்று கோலாக அவர்களை ஆக்க அவர் சிந்தித்தார். இன்று அவருடைய மனைவி பேரியல் அஷ்ரஃப் அவர்களுக்கு ஆசியப் பெண்களின் முதன்மை ஸ்தானம் கிடைத்துள்ளது. இதனூடாக அல்லது வேறு வழிகளிலாவது முஸ்லிம் பெண்கள் பற்றி நாம் பல விழிப்புணர்வு களைச் செய்ய வேண்டியுள்ளது.

தலைவர் அஷ்ரஃபைப் பற்றி நாம் பார்க்காத பக்கம் பல உள. அவற்றை யெல்லாம் திரும்பிப் பார்க்க வேண்டிய தேவை நமக்கிருக்கிறது. அவர், 2000ஆம் ஆண்டில் முன்வைத்த நகல் அரசியல் அமைப்புத் திட்டம் முஸ்லிம்கள் தொடர்பாகவும் - இந்நாட்டு அரசியல் சீர்திருத்தம் தொடர்பாகவும் அதிகம் அக்கறைப்பட வேண்டிய ஒரு சிந்தனை.

எதிர்காலம் இருள் மயமாகவுள்ள இந்தக் காலப்பகுதியில் நாம் அதிகம் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டியுள்ளது. தோற்றுப் போகும் நமது அரசியலை மீண்டும் களைகளற்று நாம் கட்டியெழுப்ப வேண்டிய நாள் வெகுதூரத்தில் இல்லை. ஒட்டுமொத்தமாக – உயிர்த் துடிப்புள்ள ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப அஷ்ரஃபின் தத்துவங்கள் நமக்குப் பயன்பட வேண்டும். அஷ்ரஃப் நாம் மீள மீள வாசிக்க வேண்டிய ஒரு புத்தகம்.

1987இல் ஏற்பட்ட இனச்சங்கார சூழ்நிலையின் பின்விளைவுதான் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கமாகும். வடகிழக்குப் பல்கலைக்கழகங்களில் தமது உயர் கல்வியைத் தொடர முடியாத முஸ்லிம் மாணவர்கள் பெரும் குழப்பத்திற்கு ஆளாகியிருந்தனர். தமது கல்வியைத் தொடரமுடியாது போய்விடுமோ என்று அவர்கள் அச்சப்பட்ட சூழ் நிலையில்தான் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் அந்த மாணவர்களின்பால் அக்கறையெடுத்தது. 1994ஆம் ஆண்டு பொதுஜன முன்னணி அமைச்சரவையிலே அங்கம் வகித்த அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் தமது அரசியல் சாணக்கியத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மாணவர்களின் பிரச்சினையைத் தீர்க்க அம்பாரை மாவட்டத்தின் ஒலுவிலை மையமாகக் கொண்ட பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க முடிவு கண்டார்.

அந்த முடிவின் பிரகாரம் அதற்குரிய இடவசதி ஆளணி பற்றிய தேவை எழுந்தது. ஒலுவிலிலே சுமார் 225 ஏக்கர் காணி அடையாளப்படுத்தப் பட்டது. இங்கு பல்கலைக்கழகத்திற்கான நிர்மாணம் பூர்த்தி செய்யப்படும்வரை அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளவில் 23.10.1995 அன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி இலங்கை முஸ்லிம்களின் அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் அரசியல் மயப்படுத்தியதில் ஒரு முக்கிய கட்டம் எனலாம். அத்தகையதொரு பிரதிபலிப்பை அம்பாரை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசமெங்கும் காணமுடிந்தது. 35 மாணவர்களுடனும் சுமார் 15இற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம் அன்றிலிருந்து அமைச்சர் அஷ்ரஃப் அவர்களின் எதிர்நீச்சலினால் அப்போதிருந்த உபவேந்தர் எம்.எல்.ஏ. காதர், பதிவாளர் ஏ.எல். ஜௌபர் சாதிக் அவர்களின் முயற்சியினால் ஒரு தேசிய பூரணத்துவமிக்க பல்கலைக்கழகமாக 1996.05.15 இலே மாற்றப்பட்டது.

அன்று இந்தப் பல்கலைக்கழகத்திலே கலை கலாசார, வர்த்தக முகாமைத்துவ பீடங்கள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறை வளாகத்திலே பிரயோக விஞ்ஞான பீடம் உருவாக்கப்பட்டது. அன்றே பருவகாலக் கல்வி முறையையும் தகவல் தொடர்பாடல் கல்வி வசதியையும் இப்பல்கலைக்கழகம் அளித்ததனால் பலராலும் சிலாகித்துப் பேசப்பட்டது. இப்பல்கலைக்கழகம் முஸ்லிம்களுக்கு மாத்திரமே உரியது என்று பேசப்பட்ட போதெல்லாம் அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் இது தமிழ் - முஸ்லிம் மாணவர்களுக்கும் உரியது, இது இலங்கையின் தேசியப் பல்கலைக்கழங்களில் ஒன்று, இங்கு மூவினத்தைச் சேர்ந்தவர்களும் கடமையாற்றுகின்றார்கள் என்ற கருத்தை வெளிப்படுத்த வந்தார்.

அட்டாளைச்சேனையிலே இயங்கி வந்த இப்பல்கலைக்கழகம் 1998.02.16ஆம் திகதி தனது சொந்த ஒலுவில் பூமிக்கு வந்து சேர்ந்தது. 2000.09.08ஆம் திகதி தான் மரணிப்பதற்கு எட்டு நாட்களுக்கு முன்னர் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் விரிவுரை மண்டபங்கள், அலுவலகங்கள், கணனிப் பிரிவு, நூலகக் கட்டடத் தொகுதி முதலானவற்றின் வளர்ச்சியினைப் பார்த்து மிகத் திருப்தி கண்டு சம்மாந்துறையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் "நான் இனி மௌத்தானாலும் கவலை இல்லை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது" என்ற கருத்தினை வெளியிட்டார்.

அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் வாழும் காலத்தில் தனது நேரங்களை யெல்லாம் இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியிலே செலவழித்தார். இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பற்றி அவர் பல கனவுகளைக் கண்டிருந்தார். அவற்றையெல்லாம் அவர் சாத்தியமாக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார். ஆனால், அல்ஹம்துலில்லாஹ்! அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் கண்ட கனவு இன்று நனவாகியிருக்கிறது. இங்கு ஒரு பன்மைத்துவ சூழல் உருவாகியிருக்கிறது. பல்வேறு பீடங்கள் உருவா கியிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பல்கலைக்கழகம் பற்றி அவர் என்ன கூறியிருக்கிறார் என்பதை அவருடைய உரைகளிலிருந்தே நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

அஷ்ரஃப் எதிர்பார்த்த பல்கலைக்கழகம் பற்றிச் சிலவற்றை அவருடைய பேச்சில் இருந்தே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்:

“எங்களுடைய கல்வி அமைப்பு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது சாதனைதான். ஆனால், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் அங்கு போய்ப் படித்து வருகின்ற அந்த மாணவர்களும் தொழிலாளர்களுடைய அந்த வரிசையிலே தான் நிற்கப் போகிறார்கள் என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது. இன்று கஷ்டப்பட்டு இடம்பெயர்ந்து இருக்கின்ற மாணவர்களுக்குத் தற்காலிக நிவாரணமாகத் தான் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஒரு காலம் வரவேண்டும் இந்தத் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் அதிலிருந்து உருவாக்கப் போகின்ற அந்தப் பட்டதாரிகளை அவர்களை எதிர்பார்த்துக் கொண்டு வேலைகள் காத்திருக்கக்கூடிய சூழ்நிலை வரக்கூடிய அளவிற்கு அங்கே தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கொடுத்திருக்கின்ற கொடுக்க வேண்டிய அந்தக் கல்வி அமைப்பு மாற்றப்பட வேண்டும். இது முக்கியமாகும். தென்கிழக்குப் பல்கலைக் கழகம் சம்பந்தமாக இங்கு ஒரு சகோதரர் சொன்னார். கொழும்பிலே வந்து 2 வருடங்கள் என்னைச் சந்திப்பதற்காகக் காத்திருந்தும் சந்திக்க முடிய வில்லை. காரணம் நான் என்னுடைய சொந்த வேலைகளில் இல்லை. எனக்கென்று சொந்த வேலைகள் எதுவும் இல்லை. ஆனால், என்னுடைய நேரத்தில் பிரதானமான ஏறத்தாழ 50 வீதமான நேரம் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கட்டடங்களைக் கட்டுவதைப் பற்றிச் சிந்திப்பதில் செல்லவில்லை. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து இன்னும் 10 ஆண்டுகள் அல்லது 15 ஆண்டுகளுக்குப் பின்பு வெளியேற இருக்கின்ற அந்தப் பட்டதாரிகள் அவர்களுக்கான தொழில்கள் காத்திருக்கக் கூடிய சூழ்நிலை வரக்கூடிய அளவுக்கு அந்தப் பல்கலைக்கழகத்தின் தன்மை மாற்றப்பட வேண்டும் அதை எவ்வாறு செய்யலாம் என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். ருகுணுவிலே ஒரு பல்கலைக் கழகம், பேராதனையில் ஒரு பல்கலைக்கழகம், கொழும்பிலே ஒரு பல்கலைக்கழகம், களனியில் ஒரு பல்கலைக்கழகம் அது மாதிரியான ஒரு பல்கலைக்கழகம் தென்கிழக்கிலே வேண்டுமென்றால் அந்தப் பல்கலைக் கழகம், எங்களுடைய சிருஷ்டிகளாக உருவாகப் போகின்றவர்களை இந்த நாடு தொழில் வழங்கக் காத்திருக்கும்படி அமைய வேண்டும். அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய ஒரு கனவுடன் அந்தக் கனவை இன்னும் ஆழமாகவும் இன்னும் அகலமாகவும் பார்ப்பதில் என்னுடைய நேரத்தின் பெரும்பகுதி செலவாகிக் கொண்டிருக்கின்றது.”

பல்கலைக்கழகத்தில் பயில்வது என்பது ஒருவகையில் பல்லின சமூகத்திற்கு மத்தியில் வாழுகின்ற கலையாகும். அதனைஅஷ்ரஃப் பின்வருமாறு தனது உரையில் குறிப்பிடுகின்றார்:

"அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்று பல்கலைக்கழகங்களுக்குப் போய்ப் பாருங்கள். பல்கலைக்கழகத்திலே முஸ்லிம் மாணவர்களை நீங்கள் இலகுவாக அடையாளம் காணலாம். அழகாக உடுத்து அவர்கள் இருப்பார்கள். பல்கலைக்கழகத்திற்குப் போனால் ஒரு 10 முஸ்லிம் மாணவிகள் ஒரு பக்கத்தில் இருப்பார்கள். அந்த முஸ்லிம் மாணவிகளுக்கும் அந்தப் பல்கலைக் கழகத்திலே இருக்கின்ற தமிழ் மாணவர்களுக்கும்,சிங்கள மாணவர்களுக்கும் இடையிலே எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஒரு காலம் இருந்தது. மட்டக்களப்பில் இருந்தும் சம்மாந்துறையில் இருந்தும் மல்வானையில் இருந்தும் கண்டியில் இருந்தும் போன பக்தர்கள் கூடிய ஒரு மரத்தின் கீழ் இருந்த ஒரு காலம் இருந்தது. இன்று அம்பாரை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டம் போன்ற பிரதேசங்களிலும் அதிகமான மாணவ மாணவிகள் போகின்ற காரணத்தினால் பல்கலைக்கழகத்திற்குள் போன பின்பும் பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் கல்முனைக்குடி மாணவர்கள் மாத்திரம் ஒரு கூட்டமாக ஒரு பக்கத்தில் இருப்பார்கள். சாய்ந்தமருது மாணவர்கள் மாத்திரம் ஒரு கூட்டமாக இருப்பார்கள் அல்லது அம்பாரை மாணவர்கள் மாணவிகள் மாத்திரம் ஒரு கூட்டமாக இருப்பார்கள். நாம் கேட்பதெல்லாம் சகோதரிகளே, இதற்குப் பெயர் பல்கலைக்கழகப் படிப்பா என்று கேட்கின்றேன். இதற்காக நாங்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமா? அங்கே போய் அங்கே பல்கலைக்கழகத்திற்குள்ளே நாங்கள் போய் விரிவுரை நடக்கின்ற மண்டபத்திற்குள்ளே போனால் விரிவுரையாளர் வந்து எதையோ வாசிப்பார். நாங்கள் நோட்டை எடுத்துக்கொண்டு அந்த நோட்டை வாசித்து விட்டுப் பரீட்சையிலே பாஸ் பண்ணுவது என்றால் திறந்த பல்கலைக்கழகம் இருக்கின்றது. திறந்த பல்கலைக்கழகத்தில் எல்லோரும் பட்டதாரிகளாக மாற முடியும்.

ஒரு உள்வாரியான பல்கலைக்கழகப் படிப்பு அவசியமானது. ஒரு உள்வாரி பல்கலைக்கழகம் என்பது அங்கே படிக்கின்ற வகுப்பறையிலே விரிவுரையாளர் சொல்லிக் கொண்டிருக்கின்ற அவர்கள் குறிப்புத் தருகின்ற உச்சரித்துக் கொண்டிருக்கின்ற சொற்கள் அல்ல. பல்கலைக்கழகம் என்பது பலருக்கு மத்தியில் வாழப் பழகுகின்ற ஒரு கலையாகும்."

விரிவுரை மண்டபத்தினது அவசியமும் ஆங்கில மொழியின் அவசியமும் பற்றி அஷ்ரஃப் கூறுகின்ற கருத்து எக்காலத்துக்கும் பொருத்தமுடையதாகும். அதனையும் இங்கு எடுத்தாள விரும்புகின்றேன்:

"ஆகவே, தான் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரை இன்னும் 5, 6 ஆண்டுகளுக்கிடையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற சகல பாடப் போதனைகளும் ஆங்கில மொழி மூலம் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்து கொண்டிருக்கின்றோம். ஆங்கில மொழி மூலம் இருந்தால் மாத்திரம் தான் அந்த வகுப்பறைக்குள் சிங்கள மாணவர்கள் வருவார்கள். தமிழ் மாணவர்கள் வருவார்கள். ஆங்கில மொழியில் இருந்தால் மாத்திரம் தான் விரிவுரையாளர்கள் சொல்லிக் கொடுக்கின்ற புத்தகங்கள் நூலகத்தில் இருக்கின்றன. எல்லாம் ஆங்கில மொழியில் தான் இருக்கின்றன. அந்தப் புத்தகங்களை நூல்களை நாங்கள் படிக்கக் கூடிய ஒரு வசதி ஏற்படும். ஆகவே, இந்தப் பிரதேசங்களில் குறிப்பாக அம்பாரை மாவட்டத்திலிருந்து வெளியேறப் போகின்ற அந்த மாணவர்கள் மாணவிகளுக்கு ஆங்கிலத்தைச் சரியான முறையிலே கற்றுக் கொடுக்க வேண்டிய ஒரு பெரிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது."

அல்ஹம்துலில்லாஹ்! இன்று இந்தப் பல்கலைக்கழகத்தில் அஷ்ரஃப் கண்ட கனவுகள் சாத்தியமாகி வருகின்றன. மாணவர்கள் தேசிய உணர்வுகளை உள்வாங்கி சர்வதேச எல்லைகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டிலிருந்து வருகின்ற மாணவர்களோடு, ஆசிரியர்களோடு ஒன்றுசேர்ந்து பழகுகின்ற நிலைக்கு வந்திருக்கின்றனர். பொறியியல் பீட, பிரயோக விஞ்ஞான பீட, முகாமைத்துவ வர்த்தக பீட, கலைப்பீட சிறப்புப் பாடநெறிகள் ஆங்கில மொழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய மாணவர்கள் தொழிற் சந்தையிலே முன்னணி மிக்கவர்களாக வெற்றி பெற்று வருகின்றனர். பல்கலைக் கழகத்தின் பௌதீக வசதிகள் பெரும்பாலும் நிறைவேறி வருகின்றன. அஷ்ரஃப் ஞாபகார்த்த நூலகம் பிரமிக்கத்தக்கவகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அஷ்ரஃப் இல்லையே என்ற ஆதங்கம் இந்த நூலகத்தை விட்டு வெளியே வருகின்ற போது எல்லோர் மனதிலும் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தையும் முஸ்லிம் காங்கிரஸையும் சிறப்பாக ஆய்வு செய்வதற்கான ஆவணங்கள் இந்த நூலகத்திலேதான் உண்டு.

எம்.எல்.ஏ. காதர் அவர்களின் நிர்வாகத்தோடு உருவான இந்தப் பல்கலைக்கழகத்தின் தற்கால உட்கட்டுமான வளர்ச்சியில் தற்போதைய உபவேந்தர் எஸ்.எம்.எம். இஸ்மாயில் அவர்களை நினைத்தாக வேண்டும்.

இறுதியாக அஷ்ரஃப் உருவாக்கிய முஸ்லிம் காங்கிரஸ் பற்றிச் சில வார்த்தைகளைக் கூறி எனது பேச்சினை நிறைவு செய்யலாம் என்று நினைக்கின்றேன். முஸ்லிம் காங்கிரஸினை அஷ்ரஃப் தொடங்கியபோது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளை அவருடைய பேச்சினை ஆதாரமாகக் கொண்டு குறிப்பிட விரும்புகின்றேன்:

"இந்தப் பயணத்தை நாங்கள் பிஸ்மிச் சொல்லித் தொடங்கிய போது கேட்கப்பட்ட கேள்விதான், இவர்களால் என்ன செய்ய முடியும் என்ற கேள்வியாகும். ஒரு அரசியல் கட்சி இல்லாமல் ஒரு வெறும் அரசியல் ஸ்தாபனத்தால் முஸ்லிம் சமூகத்திற்காக எதையும் செய்ய முடியுமா? என்ற கேள்வியை எழுப்பினார்கள். அப்போது நாங்கள் ஒரு அரசியல் கட்சியாக இருக்கவில்லை. நாங்கள் சொன்னோம் 'ஆம்' செய்ய முடியும் முஸ்லிம் சமுதாயத்தின் பிரச்சினைகளை அரசியல் பிரச்சினைகளை நாம் அடையாளம் காணுவோம் அதுதான் எங்களுடைய தற்போதைய பணி என்று அவர்களுக்கு நாம் அப்போது பதில் சொன்னோம்.

அதற்குப் பின்புதான் 1986ஆம் ஆண்டு இறுதிப் பகுதியிலே கொழும்பிலே வைத்து 'பாஷா' விலாவிலே நாம் இந்தக் கட்சியை இந்த ஸ்தாபனத்தை ஓர் அரசியல் கட்சியாகப் பிரகடனம் செய்தோம். அப்போதும் கேள்வி கேட்டார்கள். இது வெறும் அரசியற் கட்சிதானே தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படாத ஓர் அரசியற் கட்சியினால் எதைச் சாதிக்க முடியும் என்றார்கள். அவர்களுக்குச் சொன்ன பதில் நாங்கள் தேர்தல் ஆணையாளருடைய அங்கீகாரத்தைக் கேட்டிருக்கவில்லை. முஸ்லிம் சமுதாயத்தினுடைய அங்கீகாரத்தைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றோம் என்பதேயாகும்."

முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப காலத்தில் முஸ்லிம் மக்களுடைய உரிமைகள் தொடர்பாக தலைவர் கொண்டிருந்த நிலைப்பாடு இப்படித்தான் இருந்தது :

"அந்த மரண தண்டனைகளையும் அந்தக் கடிதங்களையும் எங்கள் கைகளில் வைத்துக்கொண்டு நாம் தேர்தல் பிரசாரத்திலே மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு நாள் நான் நினைக்கின்றேன் கிண்ணியா என்று. கிண்ணியாவிலே ஒரு வேப்பமரத்திற்குக் கீழ் நின்று சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட் பாளர்களுக்கு ஆதரவு தேடுவதற்காக நான் பேசிக் கொண்டிருந்த போது அந்தப் பேச்சின் இறுதியில் சில சகோதரர்கள் முஸ்லிம் காங்கிரஸ் அங்கீகரிக்கப்படாத ஒரு கட்சி. முஸ்லிம் சமுதாயத்தின் குரலை நீங்கள் எழுப்புவதாகப் பேசுகின்றீர்களே, அங்கீகரிக்கப்படாத ஒரு கட்சி எவ்வாறு பாராளுமன்றத்திற்குச் செல்ல முடியும்? என்று அங்கிருந்த சகோதரர்கள் என்னிடம் கேள்வி கேட்டார்கள். நான் திரும்பிப் பார்த்தேன் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. அண்ணாந்து பார்த்தேன் ஒரு வேப்ப மரத்தின் கீழ் நின்றுதான் பேசிக் கொண்டிருந்தேன். என்னுடைய வாயிலே வந்த மறுமொழி நாங்கள் பாராளுமன்றத்திற்குப் போக அவசியமில்லை. முஸ்லிம் சமுதாயத்தின் குறைகளை நாங்கள் பாராளுமன்றத்தில் எடுத்துப் பேச முடியாவிட்டால் ஆகக் குறைந்தது இந்த வேப்ப மர நிழலிலாவது நின்று கொண்டு இந்த முஸ்லிம் சமுதாயத்திற்காகக் குரல் கொடுப்பதற்குத் தயங்கப்போதில்லை என்று, இன்று நாம் ஆட்சியில் இருப்பது வரலாற்றின் ஒரு விபத்துதான். இந்த விபத்து நிரந்தரமாக இருக்கலாம். அல்லது நாளையே மாறக்கூடியதாக இருக்கலாம். அதற்காக அரசாங் கத்தை எதிர்த்தால் மாத்திரம் தான் முஸ்லிம் காங்கிரஸ் போராடும் என்று நாம் நினைக்கக்கூடாது. நாங்கள் அரசியல் கட்சியாக வருவதற்கு முன்பு இந்தச் சமூகத்திற்காக உழைத்திருக்கின்றோம். அரசியல் கட்சியாக வந்து பாராளுமன்றத்துக்குப் போவதற்கு முன்பு இந்தச் சமூகத்திற்காகக் குரல் கொடுத்து வந்திருக்கின்றோம். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் இந்தச் சமூகத்திற்காக நாம் கனவு கண்டு கொண்டிருக்கின்றோம். அதே போன்றுதான் ஆளும் கட்சியில் இருந்து கொண்டும் ஆட்சியிலே பங்காளியாக இருந்து கொண்டும் அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்ற போது மீண்டும் நாங்கள் ஆட்சியில் இல்லாமல் வெறும் பாராளுமன்ற உறுப்பினர்களாக வெறும் பின் வரிசை அங்கத்தினர்களாக அல்லது எதிர்க்கட்சியில் இருக்கின்ற அங்கத்தினர்களாக நாம் இந்தச் சமூகத் திற்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்."

1980களில் தமிழ் - முஸ்லிம் கலவரம் உச்சநிலையை அடைந்தபோதுதான் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெறுகிறது. 1990களிலே அஷ்ரஃப் ஒரு பல்லினச் சமூகங்களை உள்ளடக்கிய கட்சியாக முஸ்லிம் காங்கிரஸை உருமாற்ற எண்ணினாலும் 2010கள் நமக்கு மீண்டும் முஸ்லிம் காங்கிரஸின் அத்தியவசியத் தேவையை உணர்த்துவதுபோல் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஆயுட்காலம் தொடர்பாக அஷ்ரஃப் கூறிய கருத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்:

"அல்லாஹுதஆலா காப்பாற்ற வேண்டும். சிலவேளைகளில் பாராளுமன்றத்தில் இல்லாத ஒரு நிலையும் முஸ்லிம் காங்கிரஸுக்கு ஏற்படலாம். அதற்காக இந்தப் போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை. பாராளுமன்றம், அமைச்சர் பதவி, அல்லது பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர் என்ற பதவிகள் எங்களை மீட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு அம்சம் அல்ல. எங்களை எங்களுடைய போராட்டத்தைத் துரிதப்படுத்தி எங்களை எப்போதும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரே அம்சம் இந்தச் சமூகத்திற்காக இன்று வாழுகின்ற ஒரு சமூகத்திற்காக அல்ல, நாளை இந்த மண்ணிலே பிறக்கப் போகின்ற எங்களுடைய பிள்ளைகளுக்காகவும் பேரப் பிள்ளைகளுக்காகவும் பூட்டப் பிள்ளைகளுக் காகவும் எங்களை நாங்கள் மெழுகுவர்த்திகளாகத் தியாகம் செய்வதற்காகத் தான் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கின்றதென்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது."

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் அரசியல்வாதிகளுக்கு ஞானமிருக்க வேண்டும் என்பதனை அஷ்ரஃப் தனது உரைகளில் மிகத் தெளிவாக வற்புறுத்துகின்றார்:

"மறுமையில் இருந்து இம்மையைப் பார்க்கப் பிரிக்க முடியாது. இம்மை, மறுமை, அரசியல், ஆன்மீகம் எல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு வாழ்க்கையைப் பற்றித்தான் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துச் சொல்லுகின்ற பாதை நாங்கள் சென்று கொண்டிருக்கின்ற ஒரு பாதையல்ல. பெருமானார் றசூலே கரீம் (ஸல்) அவர்கள் எந்தப் பாதையில் போனார்களோ அந்தப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கின்றோம். ஆனால், பெருமானார் அவர்கள் எங்களுக்குத் தெளிவாகச் சொல்லித் தந்திருக்கிறார்கள்.

குர்ஆனில் அல்லாஹுதஆலா பல இடங்களில் சொல்லுகின்றான். குர்ஆனை வேதங்களை மாத்திரம் றசூல்மார்களுக்கும் நபிமார்களுக்கும் கொடுக்கப்படவில்லை. ஹிக்மா என்ற ஒரு நல்ல உபதேசத்தையும் அல்லாஹுதஆலா கொடுத்திருக்கின்றான். அந்த ஹிக்மாவைப் பாவிக்க வேண்டும். அது தெளிந்த ஞானம்".

இந்த தெளிந்த ஞானத்தைப் பற்றித்தான் நாம் கேள்வி எழுப்புகிறோம். நமது அரசியல்வாதிகள் என்ன செய்கிறார்கள்? அண்மையில் Daily Mirror பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் குறிப்பிட்டபடி சுமார் ஐம்பது வீதமான அரசியல்வாதிகள் க.பொ.த. சாதாரண தரத்தோடு மாத்திரம் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அஷ்ரஃப் என்ற அரசியல் ஆளுமை இலக்கியம், சமயம், மொழி, சமூகவியல், சமுதாயவியல், சட்ட ஆளுமைகளின் தொகுதியாக இருந்தது. இராஜதந்திரமும் ஆஜானுபாகு வுமான தலைமைத்துவமாக இருந்தது. இன்றைய காலத்தில் முஸ்லிம் தலைமைத்துவங்கள் பற்றி நாம் சிந்திக்கின்றபோது அஷ்ரஃப் என்ற தலைமைத்துவம் கல்முனைக் கடற்கரையில் கடலை விற்பவர்களுடனும், கச்சான்கொட்டை விற்பவர்களுடனும் பேசியதுபோன்று அடிநிலை மக்களோடு பேசவேண்டிய காலம் வந்திருக்கிறது. விளிம்பு நிலை போராளி களோடு பேசவேண்டிய காலம் வந்திருக்கிறது. குழந்தை உம்மாவுடனும் அகமது லெப்பையுடனும் பேச வேண்டிய காலம் வந்திருக்கிறது. அதேநேரம் இந்த நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தைப் பேச வைக்க வேண்டிய தேவை இருக்கிறது. பிரேமதாஸாவை, டி.பி. விஜயதுங்கவை, சந்திரிக்கா பண்டார நாயக்கவைப் பேசவைத்த நமது அரசியல் தலைமைத்துவங்கள் இன்று ராஜபக்ஷவைப் பேசவைக்க வேண்டிய தேவையிருக்கிறது. ஆனால், ராஜபக்ஷவை இலகுவில் பேசவைக்க முடியாது. ஆனால், அவரையும் பேசவைக்க வேண்டிய அஷ்ரஃபின் இராஜதந்திரம் நமக்குத் தேவைப்படுகிறது.

வெளிநாட்டு இராஜதந்திரிகளோடு இலங்கை முஸ்லிம்களின் இருப்பினைப் பேசத் தொடங்கிய அஷ்ரஃபின் தொடக்கத்தினை மிகக் கவனமாக முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் இன்று தொடர்வது மிகுந்த நம்பிக்கையையும் ஆரோக்கியத்தையும் நமக்கு வெளிப்படுத்து கிறது. மொத்தத்தில் அஷ்ரஃப் ஒரு சமூகவாதியாக, ஒரு இயக்கவாதியாக, ஒரு பல்லின அரசின் மிகப் பொருத்தமான சிறுபான்மைத் தலைமைத்து வமாக மிளிர்ந்தார்.

அந்தத் தொடர்ச்சியை மிக நிதானமாகவும் மிகப் பக்குவமாகவும் முன்னெடுக்க வேண்டிய தேவை நமது முஸ்லிம் தலைமைத்துவத்துக்கு உண்டு. முஸ்லிம் காங்கிரஸ் அல்லது முஸ்லிம் கட்சிகள் அழிந்துவிட வேண்டுமா? இல்லையா? என்பது அல்ல இன்று கேட்கப்பட வேண்டிய கேள்வி. ஒரு பல்லின நாட்டின் அரசில் முஸ்லிம் இயக்கம் எப்படிச் செயற்பட வேண்டும்? எந்தப் பாதையினை வகுக்க வேண்டும்? என்பதுதான் இன்று நமக்கிருக்கின்ற ஒரே கேள்வியாகும் என்று கூறி விடை பெறுகிறேன்.

# இலங்கை முஸ்லிம்களின் உயர்கல்வி வளர்ச்சியில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்:

## கலாநிதி எம்.எச்.எம்.அஷ்ரஃப் குறித்த மறுவாசிப்பு

எம்.எம்.பாஸில்

### அறிமுகம்

உலகின் தலைசிறந்த கவிஞர்களுள் ஒருவரான Longfellow என்பவரால் எழுதப்பட்ட "அறிவுஞானம்" எனும் கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு மேற்கோளுடன் என்னுடைய உரையைத் தொடங்கலாம் என நினைக்கின்றேன். அம்மேற்கோள் "சிறந்த மனிதர்களின் வாழ்க்கையை நாம் நினைவூட்டுவது நாம் எமது வாழ்வில் உயர்ந்து நிற்க வழிவகுக்கும்" என்பதாகும். இந்த உணர்ச்சி பூர்வமான கருத்தை அஷ்ரஃபில் எம்மால் பார்க்க முடிகின்றது.

### முஸ்லிம் கல்வி

கடந்த இருபதாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் முஸ்லிம்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டனர். 1902இல் இலங்கையில் கல்வி கற்ற முஸ்லிம்களாக வெறும் 119 பேர் மட்டுமே இருந்தனர். பேராசிரியர் விஷ்வ வர்ணபால குறிப்பிடுவதன்படி 1920களில் முஸ்லிம்கள் மத்தியில் செயற்பட்ட சிறந்ததொரு கல்வியியலாளராக டி.பி. ஜாயா விளங்கினார். அவர் அரசியல் மற்றும் அரசியலமைப்பு மாற்றங்களின் போது முஸ்லிம்களின் நலன்களுக்காக வாதாடியதுடன் நாட்டின் கல்விக் கொள்கைகளுக்குப் பங்களிப்புச் செய்து இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கான பாதையில் முஸ்லிம்களையும் பங்குதாரர்களாக மாற்றும் முயற்சியில் இறங்கியிருந்தார்.

டி.பி.ஜாயா அவர்களின் முயற்சியால் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் அதிபராகவும் அவர் பணியாற்றினார். ஆரம்பத்தில் இப்பாடசாலை வெறுமனே 6 ஆசிரியர்கள், 59 மாணவர்களுடன் இயங்கத் தொடங்கியது. அப்போது இப் பாடசாலையில் கல்வி கற்பதற்குப் பொருத்தமான சூழல் காணப்பட வில்லை. பற்றைகள் நிறைந்த காடு போல இவ்வளாகம் தென்பட்டதுடன் தளபாடப் பற்றாக்குறை, போதிய கட்டிடங்கள் இன்மை, தங்குமிட வசதி மற்றும் சமூக விரோத செயல்கள் என்பனவும் மலிந்து காணப்பட்டன. இந்நிலையில் இஸ்லாமிய அடிப்படையிலான கல்வி முறையை ஏற்படுத்த ஜாயா மிகவும் பாடுபட்டார். இவ்வாறான கல்வியூட்டலே முஸ்லிம்கள் மத்தியில் அரசியல், சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் கருதினார். எனினும் இவரது காலத்தில் (1921-1948) குறைந்தளவிலேயே கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டது.

பேராசிரியர் ஐவர் ஜெனிங்ஸின் (இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர்) அறிக்கையின்படி 1927இல் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட 315 மாணவர்களுள் மூன்று மாணவர்களே முஸ்லிம்களாவர். அதேபோல 1942இல் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 904 மொத்த மாணவர்களுள் 25 பேர் முஸ்லிம் மாணவர்கள் என்பதுடன் அது பின்னர் படிப்படியாக அதிகரித்து 1946இல் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 1302 பேரில் முஸ்லிம் மாணவர்கள் 37 பேர் என்ற நிலைக்கு மாற்றமுற்றது. இவ்வாறு முஸ்லிம் மாணவர்களின் தொகை அதிகரித்து வந்தபோதும் மொத்த மாணவர் தொகையுடன் ஒப்பிடும்போது அதன் விகிதாசாரம் மிகக் குறைவாகும். 1927-1947 வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர் அனுமதி 185 வீதத்தால் அதிகரித்த போதும் முஸ்லிம்களின் உள்நுளைவு 800 வீதத்தால் அதிகரித்தது.

## ஏ.எம்.ஏ. அஸீஸ்

முஸ்லிம் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றிய பிறிதொரு ஆளுமை ஏ.எம்.ஏ.அஸீஸ் ஆவார். இவர் 1945இல் கல்முனையின் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றினார். இவர் கல்முனை முஸ்லிம் கல்விச் சமூகத்தை **(Kalmunai Muslim Educational Society)** உருவாக்கி அதன்மூலம் முஸ்லிம்

மாணவர்களுக்கு உதவி செய்தார். 1948 இல் அஸீஸ் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் ஜாயாவைப் பின்பற்றி தமது கல்விப் பங்களிப்பினை இச்சமூகத்திற்கு ஆற்றினார். இவர் பற்றிக் குறிப்பிடும் எம்.எச்.எம். அஷ்ரஃப் (1995) "முஸ்லிம்களின் கல்வி எனும் வைரத்தை ஜாயா தோண்டி எடுத்தார். அஸீஸ் அதனைப் பட்டை தீட்டினார்" என்கிறார்.

சித்திலெப்பை, டி.பி. ஜாயா, அஸீஸ் போன்றோருக்கு வேறு வேறு நோக்கங்கள் இருந்தன. ஆனால் எல்லோரும் அல்லாஹ்வையும் இஸ்லாத்தையும் இணைத்தவாறே கல்வி **(Islamization of knowledge)** இடம்பெற வேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர்.

அஸீஸ் முஸ்லிம் சிறுவர்களின் கல்வி, பெண்களின் கல்வி தொடர்பாக அதிக அக்கறை செலுத்தியதுடன் ஏழை மாணவர்களின் கல்வி இடைவிலகல் தொடர்பாகவும் கவனம் செலுத்தினார். டி.பி. ஜாயா **Islamic Foundation** என்ற அமைப்பைத் தாபித்தது போல அஸீஸ் **Philosophical Foundation (Alama Iqbal)** என்ற அமைப்பைத் தாபித்து கல்வி தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

## கலாநிதி பதியுதீன் மஹ்மூத்

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியானது அவர்கள் அரசியலில் முக்கிய பதவிகளைப் பெறவும் காரணமாகியது. அத்தகையதொரு பின்புலத்திலிருந்து வந்தவரே பதியுதீன் மஹ்மூத் அவர்கள். அவர் 1960இல் கல்வி மற்றும் ஒளிபரப்பு அமைச்சராகப் பணியாற்றியதுடன் 1970இல் கல்வி அமைச்சராகவும் பதவி வகித்தார். அஸீஸ் அவர்கள் தமிழில் கல்வி கற்க வேண்டும் எனக்கூறியவேளை பதியுதீன் மஹ்மூத் முஸ்லிம்கள் சிங்களத்தில் கல்வி கற்க வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தார். பின்னர் இக்கருத்தினை அவர் தவறு என ஒத்துக்கொண்டதாகவும் வரலாறு குறிப்பிடுகின்றது. இவருடன் இணைந்தவகையில் டொக்டர். எம்.சி.எம்.கலீல் மற்றும் சேர்.ராஸிக் பரீட் ஆகியோரும் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றினர். எனினும் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியானது குறிப்பிடும்படியான முன்னேற்றங்கள் எதனையும் காணவில்லை.

## கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃப்

இந்தப் பின்னணியில் முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்காற்றிய தலைவர்களுள் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களுக்குப் பிரதான இடமுண்டு. அரசியல், சட்டம், கல்வி, இலக்கியம் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கிய அவர், முஸ்லிம்களின் கல்வி தொடர்பாகக் கூடுதல் அக்கறை எடுத்ததுடன் முஸ்லிம்களின் உயர் கல்வியில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தினார். அவரது அயராத முயற்சியினால் இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களுள் ஒன்றான தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால கல்வி நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கான அரசியல் தலைமைத்துவத் தினையும் அவர் தொடர்ந்து வழங்கிவந்தார்.

அஷ்ரஃபின் கல்விப் பங்களிப்புக்கும் அவரது அரசியலுக்கும் மிக நெருக்கமான தொடர்பிருக்கின்றது. குறிப்பாக 1980களில் உக்கிரமடைந்த தமிழர் விடுதலைப் போராட்டமும் ஆயுதக் குழுக்களின் தோற்றமும் இலங்கை இனமோதலில் ஒரு புதிய நிலைமாற்றத்தைக் காட்டியதுடன் இக்காலப்பகுதியில் தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையிலான இன ஐக்கியமும் பாதிக்கப்பட்டிருந்தது. இந்தப் புறநிலைச் சூழல்தான் அஷ்ரஃ பினைத் தமிழ் தேசியத்திலிருந்து விலகி முஸ்லிம் தேசியத்திற்கான அரசியல் தளத்தினை உருவாக்கத் தூண்டியிருந்தது. தமிழ்–முஸ்லிம் இன ஐக்கியத்தினை ஏற்படுத்துவதில் அக்கறையுடன் செயற்பட்ட அவர், தனது சமூகத்திற்கான புதிய பாதையினைத் தேர்ந்தெடுப்பதற்கு திணிக்கப்பட்டார்.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கப் பின்னணி

இக்காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரியினை (1981) ஆரம்பித்தது. 1986 ஒக்டோபரில் கிழக்குப் பல்கலைக்கழகம் என இக்கல்லூரி பெயர் மாற்றப்பட்டது. 1986.09.25ஆம் திகதியிடப்பட்ட பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின்படி அதன் அமைவிடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பாக இருக்க வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. இன ஐக்கியத்தினை முதன்மையாகக் கொண்டே இவ்விட அமைவிடம் நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆனால், அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதற்கு மாற்றமாக, சட்டத்திற்குப் புறம்பாக விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய பீடங்கள் வந்தாறுமூலையில் அமைக்கப்பட்டதனால் இப்பல்கலைக்கழக உருவாக்கத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இன ஐக்கியம் ஏற்பட வாய்ப்பில்லாமல் போனது. எனினும் வர்த்தக முகாமைத்துவ, கலைப் பீடங்கள் மட்டக்களப்பிலே இயங்கின.

இந்நிலையில் 1986.02.06ஆம் திகதியன்று உயர்கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்களுக் கமைய இப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் (Multi Campus) இடம்பெறக் கூடியவகையில் அமையப்பெற வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. அதற்கமைவாகவே இப்பல்கலைக்கழம் கிழக்குப் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இவ்விடயம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது மூலோபாயத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதய கிழக்குப் பல்கலைக்கழகம் 1981இல் பல்கலைக்கழகக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்ட போது அங்கு இன ஐக்கியம் ஏற்படுத்து வதற்கு ஏற்ப மூன்று இன மாணவர்களும் உள்வாங்கப்பட்டதுடன் ஆங்கிலம் அதன் போதனா மொழியாக்கப்பட்டது. ஆனால் 1983 ஜூலைக் கலவரத்திற்குப் பின்னர் சிங்கள மாணவர்களுக்குப் போதிய பாதுகாப்பின் மையால் அவர்கள் வேறு பல்கலைக்கழகங்களிற்கு நிரந்தரமாக இடமாற்றப்பட்டதுடன் இதன் பின்னரான காலப்பகுதியில் சிங்கள மாணவர்களை இப்பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதும் நிரந்தரமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் வந்தாறுமூலை வளாகம் முஸ்லிம் மாணவர்களுக்கு குறிப்பிடும்படியானளவு பாதகமாக அமையாததால் அவர்கள் தொடர்ந்தும் அங்கு கல்வி கற்றனர்.

எனினும், 1990களுக்குப் பின்னர் தீவிரமாக அதிகரித்த இன ரீதியான பிளவு வந்தாறுமூலையில் இருந்த முஸ்லிம் மாணவர்களின் பாதுகாப்புக் குறித்த அச்சத்தினை ஏற்படுத்தியது. இக்காலப் பகுதியில் பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டமை, அவர்களின் சொத்துக்கள் பறிக்கப்பட்டு தமது வாழ்விடங்களை விட்டும் வெளியேற்றப்பட்டமை, கடத்தப்பட்டமை போன்றன முஸ்லிம்கள்

மத்தியிலான பாதுகாப்பின்மையை உணர்த்தியது. இதனால் இப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்கள் தற்காலிகமாக வேறு பல்கலைக்கழ கங்களிற்கு இடமாற்றப்பட்டனர்.

இடமாற்றம் பெற்றுச்சென்ற முஸ்லிம் மாணவர்கள்பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகங்கொடுக்க நேர்ந்தது. அதேவேளை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய முஸ்லிம் விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் என்போர் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாகினர். இவ்வச்சுறுத்தல்கள் காரணமாக முஸ்லிம் உத்தியோகத்தர்கள் தமது அலுவல்களுக்குச் செல்வதற்கு அச்சப்பட்டனர். இப் பல்கலைக்கழக நியமனங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதில் இருந்தும் முஸ்லிம் கல்வியியலாளர்கள் பலர் ஒதுங்கிக்கொண்டனர்.

அதேவேளை **1995**இல் மட்டக்களப்பு நகர எல்லைக்குள் இயங்கிவந்த பிரதான பீடங்களில் கல்வியினைத் தொடர்வதிலும் முஸ்லிம் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அங்கும் முஸ்லிம் மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டதுடன் முஸ்லிம் உத்தியோகத் தர்களும் அச்சுறுத்தப்பட்டனர். இதனால் கிழக்கில் மாணவர் போராட்டம் எழுச்சியடைந்தது. இதன்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற பல மாணவர்கள் இணைந்து முஸ்லிம் மாணவர் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.ஜெமீலின் வழிகாட்டலின் கீழ் பல கோரிக்கைகளை முன்வைத் தனர். இச்செயற்பாட்டின் பின்னணியில் அக்காலத்தில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர்களாக கடமையாற்றிய கே. இஷ்ஹாக், எம்.ஐ.எம்.கலீல், எம்.எஸ்.எம். ஜலால்டீன், எஸ்.எம்.ஆலிப், எம்.எம். றபீக் ஆகியோர் செயற்பட்டனர். அதேவேளை சம்மாந்துறையில் இயங்கிவந்த பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளராக கடமை புரிந்த கலாநிதி சித்தீக் அவர்களின் பங்களிப்பும் இதில் மகத்தானதாகும். அக்கோரிக்கைகளுள் எல்லா இனத்தவர்களும் சுதந்திரமாக அச்சமின்றி நடமாடக்கூடிய இடத்தில் பல்கலைக்கழகம் அல்லது அதன் பீடங்கள் அமைய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டதுடன் இன ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு அது இன்றியமையாதது என்ற விடயமும் எடுத்துக்காட்டப்பட்டது.

நெருக்கடி நிறைந்திருந்த இக்காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் ஒப்பீட்டு ரீதியாக குறைந்த ஆபத்துமிக்க பிரதேசமாக அம்பாரை மாவட்டமே காணப்பட்டது. இதனால் இன ஐக்கியத்தை மையமாகக் கொண்டு முஸ்லிம்கள் உட்பட ஏனைய இனத்தைச்

சேர்ந்த மாணவர்களும் சுதந்திரமாகக் கல்வி கற்கக் கூடிய வகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் அம்பாறையில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர்கள் வேறு பல்கலைக் கழகங்களுக்கு நிரந்தரமாக இடமாற்றப்பட வேண்டும் என வலியுறுத் தப்பட்டது. இதன்போது முஸ்லிம் மாணவர்கள் தற்காலிக இடமாற்றத்தை எதிர்த்து, சிங்கள மாணவர்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று தங்களுக்கும் நிரந்தர இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி நின்றனர். அவ்வாறின்றி கிழக்குப் பல்கலைக்கழகத்திலேயே தமது கல்வி நடவடிக்கையினை தொடரவேண்டும் என்றால் சிங்கள மாணவர் களும் அங்கு அனுப்பப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இவையனைத்தும் சாத்தியமற்றுப் போகும் பட்சத்தில் அம்பாறை மாவட்டத்தில் தனியான பல்கலைக்கழகம் ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது.

சுருக்கமாகக் குறிப்பிடுவதாயின் முஸ்லிம் மாணவர்களால் முன்னெடுக் கப்பட்ட அவர்களது உயர் கல்விக்கான போராட்டம் பின்வரும் மூன்று பதிலீட்டுக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவை: அம்பாறை மாவட்டத்தில் பீடங்களை அமைத்துத்தரல் அல்லது மாணவர் களை ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு நிரந்தரமாக இடமாற்றுதல் அல்லது அம்பாறை மாவட்டத்தில் புதிய பல்கலைக் கழகத்தை உருவாக் கித்தரல் என்பனவாகும்.

## புதிய பல்கலைக்கழக உருவாக்கத்திற்கான அரசியல் தலைமைத்துவம்

இத்தகையதொரு பின்புலச் சூழ்நிலையிலேயே அஷ்ரஃபின் தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கப் பிரவாகம் ஆரம்பிக்கின்றது. முதலிரு கோரிக்கைகளும் தமது சமூகத்தின் உயர் கல்வி வளர்ச்சிக்கு ஆரோக்கிய மானது அல்ல எனத்தென்பட்ட நிலையில் புதிய பல்கலைக் கழக உருவாக்கத்திற்கான அரசியல் தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு அஷ்ரஃப் முற்பட்டார்.

1980களுக்குப் பின்னரான காலம் இலங்கை முஸ்லிம் அரசியலின் நெருக்கடி நிறைந்த காலமாயினும் 1994இற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றம் முஸ்லிம் அரசியலில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தியது.

பெருவாரியான கிழக்கு முஸ்லிம்கள் அஷ்ரஃபின் அரசியல் தலைமைத்துவத்தினை ஏற்று அங்கீகரித்தனர். அஷ்ரஃப்ஆட்சியினைத் தீர்மானிக்கும் மக்கள் ஆதரவினைப் பெற்றுக்கொண்டார். இதன்படி 1994இல் உருவான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அஷ்ரஃப் முக்கியமான பாத்திரத்தினை எடுத்ததுடன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நெருக்கமான அரசியல் உறவுகளையும் வளர்த்துக் கொண்டார். அரசியல் ரீதியாக இருந்த இச்சாதக சூழ்நிலை அஷ்ரஃப் தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தது.

இந்நிலையில் முஸ்லிம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு முடிவினைப் பெற்றுக்கொடுக்கும் கைங்கரியத்தில் அஷ்ரஃப் தன்னை இணைத்துக் கொண்டதுடன் தனக்கிருந்த அரசியல் பலத்தினைப் பயன்படுத்தி புதிய பல்கலைக்கழகம் ஒன்றினை அம்பாரையில் அமைப்பதற்கான அனுமதியினையும் பெற்றுக் கொண்டார்.

இப் புதிய பல்கலைக்கழக உருவாக்கச் சிந்தனை அஷ்ரஃபுக்குச் சூழ்நிலை வயப்பட்டதாக அன்றி அவரது தூரநோக்குள்ள சமூக அரசியல் பார்வை யில் என்றும் நீங்காத இடத்தினைப் பெற்றிருந்தது. குறிப்பாக முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதென்பது தமது இன விகிதாசாரத்தைவிடக் குறைவாக இருந்ததுடன் ஏனைய மாணவர் களுடன் ஒப்பிடும்போதும் அது மிகமிகக் குறைவானதாக விளங்கியது. இந்நிலையினைப் போக்கி முஸ்லிம்களைக் கல்வியியல் ரீதியாக மேம் படுத்த வேண்டும் என்பதில் அஷ்ரஃப் உறுதியான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தார் என்பதனை அவரது ஆரம்பகால உரைகள் பலவற்றிலிருந்து அறியமுடிகின்றது.

இதன்படி அஷ்ரஃபின் அரசியல் தலைமைத்துவத்துடன் 1995 ஒக்டோபர் 23இல் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 33 இடம்பெயர்ந்த மாணவர்களுடன் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக் கட்டடத்ததில் தமது கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்த இக்கல்லூரி, கலை மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடங்களை உள்ளடக்கியிருந்தது. பின்னர் தேசியப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்ட இப்பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக

அரசறிவியல் துறை பேராசிரியர் எம்.எல்.ஏ.காதர் கடமையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. அட்டாளைச் சேனையில் இயங்கிவந்த இப்பல்கலைக் கழகமானது 1998இல் ஒலுவில் வளாகத்திற்கு இடமாற்றப்பட்டது.

இலங்கையின் உயர் கல்வி வளர்ச்சியில் உன்னதாமானதொரு இடத்தினைப் பெற்றிருக்கும் இப்பல்கலைக்கழகமானது தற்சமயம் கலை கலாசார பீடம், முகாமைத்துவ வர்த்தக பீடம், பிரயோக விஞ்ஞானங்கள் பீடம், இஸ்லா மிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம், பொறியியல் பீடம் ஆகிய ஐந்து பீடங்களைக் கொண்டுள்ளது. நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்து வருகைதரும் மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் தமது கல்வி நடவடிக்கையினைத் தொடர்ந்துவருவதுடன் அண்மைக்காலத்தில் சர்வதேச மாணவர்களும் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். அதேவேளை பல்தன்மையினைப் பிரதிபலிக்கும் கல்விசார் ஊழியர் தொகுதி, நிர்வாக ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள், தற்காலிக ஊழியர்கள் என இப்பல்கலைக்கழக சமூகம் விரிவாக்கம் பெற்றுள்ளது.

அஷ்ரஃபின் பல்கலைக்கழக உருவாக்கக் கனவு தனது சமூகத்தின் நலனுடன் பெருமளவு பின்னிப்பிணைந்திருந்த போதிலும் பல்கலைக்கழக மொன்றின் உருவாக்கம் இனத்துவ ரீதியிலானதாக இருந்து விடக்கூடாது என்பதில் அவர் மிகக் கவனமாகச் செயற்பட்டிருக்கின்றார். அதன் காரணமாகவே அஷ்ரஃப் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை ஒரு தேசியப் பல்கலைக்கழகமாக உருவாக்கினார். அவர் அரசியலில் உச்சத் தினை அடைந்திருந்த போது தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் மாணவர்களுடன் தமிழ் மாணவர்களையும் இணைத்து கல்வி நடவடிக் கையினைத் தொடர்ந்ததனையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தற்சமயம் பெரும்பான்மையின சிங்கள மாணவர்களும் உள்ளீர்க்கப்பட்டுத் தேசியப் பல்கலைக்கழகமொன்றின் அனைத்துக் குணாம்சங்களும் பொருந்தியதாக தென்கிழக்குப் பல்கலைக்கழம் மாற்றமுற்றுள்ளது. அஷ்ரஃபின் கனவும் அதுவாகத்தான் இருக்க வேண்டும்.

நாட்டினதும் பிராந்தியத்தினதும் தேவையினைக் கருத்திற்கொண்டு B.A, BBA, B.Sc, B.Com, B.Sc. MIT, B.Sc.ENG போன்ற இளமாணி என பட்டங்களை வழங்கிவருவதுடன் முதுமாணி, முதுதத்துவமாணி, சான்றிதழ், டிப்ளோமா எனப் பல பாடநெறிகளும் இப் பல்கலைக்கழகத் தினால் வழங்கப்படுகின்றது.

மேலும் நவீன கலைத்திட்ட மறுசீரமைப்புக்கிணங்க இஸ்லாமிய வங்கியற் துறை, இஸ்லாமியச் சட்டம், தகவல் தொழில்நுட்பம், பொதுக்கொள்கை, மும்மொழிக்கற்கை, சுற்றுலாத்துறை, நில அளவை போன்ற புதிய கற்கைகளை ஆரம்பிப் பதற்கான முயற்சிகளையும் இப்பல்கலைக்கழகம் முன்னெடுத்துள்ளது.

தற்சமயம் இப்பல்கலைக்கழகம் சுமார் 3400 உள்வாரி மாணவர்களையும் 7500இற்கு மேற்பட்ட வெளிவாரி மாணவர்களையும் இணைத்து கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றது. அண்மைக்காலத்திலிருந்து பட்டப்பின்படிப்புத் துறையில் ஆர்வம் காட்டிவரும் இப்பல்கலைக் கழகமானது ஏறத்தாழ 200இற்கு மேற்பட்ட பட்டப்பின்படிப்பு (MBA, MA, M.Phil, PGD) மாணவர்களையும் உள்ளடக்கியுள்ளது.

உயர் கல்வித்துறையில் புதிய தடம்பதித்திருக்கும் இப்பல்கலைக்கழகம் அதன் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களை நினைவுகூரும் வகையில் அஷ்ரஃப் ஞாபகார்த்த நூலகம் ஒன்றினையும் ஸ்தாபித்துள்ளது. மிகப் பிரமாண்டமானவகையில் அமையப் பெற்றுள்ள இப்பல்கலைக்கழக நூலகம் ஏறத்தாள 120,000 புத்தகங்களுடன் 275 சஞ்சிகைகளையும் 1200 DVD களையும் உள்ளடக்கியதாகப் பிராந்தி யத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிவரு கின்றது.

பெருந்தொகையான மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்குத் உதவத்தக்கவகையில் அமையப்பெற்றுள்ள இந்நூலகம் 400 ஆசன இருக்கைகளுடன் மாற்றுத்திறனாளிகள் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு இடமளிக்கத் தக்கதான வசதிகளையும் கொண்டு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அஷ்ரஃபினால் கட்டமைக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் அதனது உட்கட்டமைப்பில் என்றுமில்லாதவாறு பாரிய வளர்ச்சிகண்டுள்ளது. நூலகம், முகாமைத்துவ வர்த்தக பீடக் கட்டடம், காபட் வீதிகள், மாணவர் விடுதிகள், பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்திற்கான கட்டடம், விளையாட்டு மைதானம் என நீண்டு செல்லும் பல்கலைக்கழக உட்கட்டுமான விருத்தி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் என்றும் நினைவு கூரத்தக்கதாகும். இவ் உட்கட்டுமான விருத்திற்கு பங்களிப்புச் செய்தவர்களையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டியுள்ளது.

அதன்படி உள்ளக ரீதியாகவும் வெளிநாடுகளிலிருந்தும் இப்பல்கலைக் கழகத்தின் உட்கட்டுமான விருத்திற்குப் பல மில்லியன்கள் வழங்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாகக் குவைத் அரசாங்கம் இலகு தவணை அடிப்படையில் வழங்கிய கடன் உதவி இப்பல்கலைக்கழகத்தின் பொறி யியல் பீடக் கட்டடம், ஊழியர் விடுதிகள், சுகாதார நிலையம், பொழுது போக்கு மையம், மாணவர் விடுதிகள், விளையாட்டு மைதானம் என்ப வற்றை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ளது. அதேவேளை, உயர்கல்வி அமைச்சினது நிதி ஒதுக்கீட்டின் கீழ் 4 புதிய மாணவர் விடுதிகளை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொண்டுவருவதிலும் இப்பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் பல்லின மத, கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு மாணவர்களை ஒன்றிணைத்து இன நல்லுறவினை ஏற்படுத்துவதிலும் இப்பல்கலைக்கழகம் அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றது.

ஆய்வு ரீதியாகப் புதிய வளர்ச்சிநிலைகளை எட்டுவதற்கு இப்பல்கலைக் கழகம் ஆரம்பம்முதல் முயற்சி செய்துவருகின்றது. அதற்கமைய பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்களது ஆய்வு நடவடிக்கைகள் வரவேற்கப்படுவதுடன் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுக்கலாசாரம் ஒன்றினை உருவாக்குவதற்காகப் பல தரப்பட்ட ஆய்வரங்குகளையும் இப்பல்கலைக்கழகம் நடாத்திவருகின்றது.

## முடிவுரை

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மையப்படுத்தியதாக இங்கு சுட்டிக்காட்டிய அபிவிருத்திகளும் அடைவுகளும் அதன் ஸ்தாபகர் அஷ்ரஃபின் சிந்தனை ஓட்டத்திலிருந்து பெறப்பட்டதனை யாரும் மறுப்பதற்கில்லை. ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று முஸ்லிம் களின் கல்வி நிலையினை மேம்படுத்துதல், அரச மற்றும் தனியார் துறை களில் முஸ்லிம்களின் வேலைவாய்ப்பு விகிதத்தினை அதிகரித்தல், ஐக்கியத்தினை வளர்த்தல் முதலானஅஷ்ரஃபின் உயரியசிந்தனையின் வெளிப்பாடாகவும் இப்பல்கலைக்கழகத்தினை நாம் பார்க்க வேண்டி இருக்கின்றது.

அறிஞர் சித்திலெப்பையுடன் ஆரம்பிக்கும் இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சி மிக நீண்ட வரிசை கொண்ட ஆளுமைகளை உள்ளடக்கியது. எனினும் உயர் கல்விக்குப் பங்காற்றியவர்கள் குறிப்பிட்ட சிலரே. அக்குறிப்பிட்ட சிலருள் முதன்மைமிக்கவராக நாம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரஃபினைப் பார்க்க வேண்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டு அவர்களது ஐக்கியம் சிதறுண்டு போனபோது இச்சமூகத்தினைக் கல்வியின் ஊடாக உயர்வடையச் செய்ய அஷ்ரஃப் எடுத்த முயற்சி தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கத்துடன் நிறைவேறியிருப்பதில் இருந்து 20ஆம் நூற்றாண்டின் முஸ்லிம் உயர் கல்வியின் முன்னோடிகளுள் ஒருவராக அவரை அடையாளப்படுத்துவதில் தவறு இருக்காது என நான் உறுதியாக நம்புகின்றேன். இதற்குத் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் இப்பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளிவரும் மாணவர்களும் தக்க சான்றாக இருப்பர்.

## உரையாளர்கள்

### மன்சூர் ஏ. காதிர்

இவர் தற்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளராகக் கடமையாற்றுகின்றார். இலக்கியவாதியும் எழுத்தாளருமான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டத்தினையும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டத்தினையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார். முஸ்லிம் அரசியல் பற்றியும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பற்றியும் பல்வேறு ஆய்வுகளைச் செய்துள்ள இவர் குறிப்பிடத்தக்க சமூக, அரசியல், இலக்கிய விமர்சகராவார். 'கனீமத்' என்ற கவிதைத் தொகுதியையும் இவர் வெளியிட்டுள்ளார்.

### எம்.ஏ.எம்.பௌசர்

இவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராவார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் முதுமாணிப் பட்டப்படிப்பினைத் தொடர்ந்து வருகின்ற இவர், சமாதானக் கற்கைகள் நிறுவனத்தின் சமாதானத்துக்குத் தயார்படுத்தல் டிப்ளோமாவினையும் பூர்த்தி செய்துள்ளார். அரசியல் துறை சார்ந்த பல்வேறு நூல்களை எழுதியுள்ள இவர் குறிப்பிடத்தக்க இளம் ஆய்வாளருமாவார்.


### றமீஸ் அப்துல்லா

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் மொழித்துறையின் தலைவருமாவார். இவரது ஆய்வுகள், இலங்கையின் இனத்துவக் கற்கைகள், மனித உரிமைகள், இலக்கியம், பத்திரிகையியல் தொடர்பானவை. உளவளத்துணை ஆலோசகராகப் பயிற்றப்பட்ட இவர், தமிழில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பொதுசன தொடர்பாடலில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

## எம்.எம். பாஸில்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளரான இவர், அரசியல் விஞ்ஞானம், இலங்கையின் இனப் பிணக்கு, சமூக இசைவாக்கம், மனித உரிமைகள், சர்வதேச உறவுகள் என்பனவற்றின் ஆய்வில் பெரும் ஈடுபாடு கொண்டவர். ஜப்பான் அரசாங்கத்தின் புலமைப் பரிசில் பெற்று மேஜி பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்ற இவர்,தற்போது தனது கலாநிதிப் பட்டப்படிப்பினை மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றார். இவர் மனித உரிமைகள், சர்வதேச விவகாரங்கள் போன்றவற்றில் டிப்ளோமா பாடநெறிகளைப் பூர்த்தி செய்துள்ளார்.

# குறிப்புக்கள்



"தங்கம்போல் மேனி
தளதளத்த கண்ணொளிவு
முத்துப்போல் பல்லு
அவர்ர முகத்தெளிவு
நாங்க காணுறெப்போ!

மொட்டத் தலையும்
மொழுகு நிறக் கண்மொழியும்
சித்திரம் போல் நெத்தியும்
றகுமான் இந்த சீமயிலே
நாங்க காணுறப்போ!

கொத்தமல்லி கோமதகம்
குங்குமப் பூ குங்கிலிங்கம்
சாம்புராணி கற்பூரமே
தலைவர நாங்க எங்க தேடிக் கண்டெடுப்பம்.

மாணிக்க ரத்தினமே!
மாறா ஒளித் தங்கமிது
எங்கிட கல்பு நிறஞ்ச கனி
உங்கள நாங்க காணுவது எக்காலம்"

ISBN: 978-955-42038-2-2
9 789554 203822

cover design : nawas sawfi